18

கைமுறை அட்டவணை

128

128

165

****************************

ஏ.அங்கமுத்து பண்டிதர்,

பழைய பாளையம், நாமக்கல், 1

சேலம்

கை முறை அட்டவணை.

****************************

Verified
Sundaranandan
31-1-63

O.N.
Sir,

Palm leaf returned to Indiandal
on. 28.6.63

28/6/63

128

## கை முறை அட்டவணை.

தேதி:- 29.10.1962.

ஓலை சுவடியின் பெயர்:- கை முறை அட்டவணை.

உரிமையாளரின் பெயர்:- ஏ. அங்கமுத்து பண்டிதர்.

இடம்:- பழைய பாளையம், நாமக்கல், சேலம்.

*****

குன்மத்துக்கு:-

நூலின் தொடக்கம் இல்லை.

மகா தாம்பரம்:-

பத்துக் காசிடை செம்பு, ஈசல் இறகு போலே தட்டி பத்துக் காசிடை சல்லிக்கு ஐந்து காசிடை, கெந்தகம், மூன்று காசிடை இரதம், இரண்டு காசிடை சாதிலிங்கம் ஒரு காசிடை, மனோசிலை, காந்தம் அரைக் காசிடை, அரிதாரம் இதெல்லாம் மனோசிலை சாறு எலுமிச்சம் பழச் சாற்றில் ---- தாம்பர சுத்தி கொள்ளுக் சாறு, கற்றாழை, புளிச்ச மோர், பொன்னாங்காணி இந்தச் சாறுகளிலே முறையாக என சிலவு வறுத்துக் கொட்ட சுத்தியாம். மூகையிலடைத்து ஏழு சீலை மண் செய்து புளியம் விறகில் கெஜபுடம் போடப் பற்பமாம். இந்தப் பற்பம் சுக்கு, மிளகு, திப்பிலி, வறுத்துப் பொடி செய்து ஒரு மா பற்பம் எடுத்து முன் பொடி செய்த பொடியில் கூட்டிக் கொள்ளக் குன்மம் நிற்கும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு) தாம்பிர பற்பம்.

செம்புத் தகடு பத்துக் காசிடை, இரசம் அஞ்சு காசிடை இது இரண்டையும் குழிக் கல்லில் விட்டு மத்திக்க செம்பிலே இரசம் பற்றின வாறே சிவந்த நாயுருவியை நறுக்கி ஒரு பிடி சட்டியிலிட்டு பரப்பி அஞ்சு காசிடை கெந்தகம் ஆற்கப் பொடி செய்து முன் சட்டிக் குள் பரம்பின நாயுருவின் மேலிட்டு அதின் மேலே செப்புத் தகடு பரப்பி அதின் மேலே கெந்தகம் பரப்பி இப்படி அடுக்கடுக்கா மூன்று தரமாக வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து குழி கெல்லிக் கெசு புடமாக காட்டெரு முட்டையில் வைத்து பற்பமான வாறே எடுத்து சித்திர மூலக் கஷாயம் திரிகடுகு கஷாயம் இவை யிற்றில் அரைத்து ஒரு சாமத்துக்கு ஒரு புட மிட்டு பின்பு எடுத்து ஒரு மா பற்பம் அநுபான அறிஞ்சு யிட சர்வ குஉலயும் போம்.

குன்மத்துக்கு வலி குன்மத்துக்கு.

குன்மத்துக்குப் பரிகாரம்:- முருங்கை வேர் குக்கில் திப்பிலி. இந்த மூன்று மருந்தும் முருங்கை வேர் சாற்றிலே அரைத்து காலமே குடிக்க குன்ம வியாதி திற்கும்.
வலி குன்மத்து செப்புச் சல்லி ஒரு பலம், காந்தம் துரிசு, இந்தகம், சீனக் காரம், ஆக ஒரொன்று ஒரு பலம் கூட்டி புதுச் சட்டியில் மருந்தும் சல்லியுங் கலந்து வைத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு தானிய பிடத்தில் எட்டு நாளும் குழி பிடத்தில் எட்டு நாளும் வைத்து எடுத்துக் கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலிகூட்டி கூட்டி தேனில் கொள்ள பத்தியம் பசுவின் பாலும் நெய்யுங் கூட்டவும்..

(வேறு) வாயு குன்மத்துக்கு.

கெந்தகம் நாற் கழஞ்சு, இரசம் இரு கழஞ்சு, அரப் பொடி முக்கழஞ்சு, இது எல்லாம் கற்றாழஞ் சாறு விட்டு அரைத்து பொடியாக்கித் தேனில் கொள்ள (வேறு) சிற்று மணக்கங் கொட்டை வறுத்து ஊற்றின என்ணையில் இஞ்சி வெள் காவுள்ளி திப்பிலி, கடுகுரோகிணி, பெருங்காயம் இந்த அஞ்சு மருந்தும் அரைத்துக் கரைத்து என்ணையில் வடித்து நக்கவும். சத்தி நிற்கும்.

(வேறு) எரி குன்மத்துக்கும். சத்தி குன்மத்துக்கும்.

ஆவாரம் பட்டை வேர்ப் பட்டை முக்குறுணி கொண்டு வந்து தவைச்சு தாளி தண்ணீரிலே ஊறப் போட்டு எட்டு நாள் தினம் உரிய தண்ணீர் குடிக்க நிற்கும்.

(வேறு) வலி குன்மம், சத்தி குன்மம், வாய்வு குன்மம் மூன்றும் மருந்து.:-

இரசம் கழஞ்சு, காந்தம் கழஞ்சு, கெந்தகம் கழஞ்சு, அரப் பொடி கழஞ்சு, இந்த நாலு மருந்தும் கற்றாழஞ் சாறு வார்த்தரைத் இருப்பு சிமிளிலடைத்து ஒரு பல்லாகையில் நாழி நெய் மணலிட்டு அதினடுவே வைத்து மேல் வாய் மூடி சீலை மண் செய்து ஒரு சாமம் எரித்து அதை எடுத்து தேனில் கொள்ள நிற்கும்.

(வேறு) வாழைச் சருகு எள்ளுச் சருகுச் சட்டை, ஊமத்தை, குறுணி, குறுணி சாம்பல் சுட்டு இரண்டு மிடாவில் வடித் அந்தச் சாம்பல் முக்கால் உலர்த்தி வடித்து இரண்டு நாள்க் காய்ச்சி சீனி போலே ஆன பக்குவத்திலே சிறைச்சு எடுத்து ஒரு பழகின பாண்டத்தில் வைத்து ஒரு கொள்ளவும் எடுத்து பணவிடை தேனிலே குழைத்து அடி நாக்கிலே விளயிடவும். பத்தியத்துக்கு அவரைக் காய், வெள்ளாட்டுப் புக்கண்டம், இறால் மீன் கெளிற்றி மீன், நெய் பரவ் ஆகாது. இருகைக்கு ஆகாது. இப்படி நாற்பது நாள் கொள்ளவும்.

(வேறு) கள்ளிப் பாலை ஒழுக்கு வந்து அறுத்துச் சோறு வாங்கி வைத்து களஞ்சு கெந்தகம் பொடி செய்து அதுக்குள்ளின பாதி யிட்டு அதின் மேலே அரைக்க களஞ்சு செப்புத் தகடு யிட்டு அதின் மேலேஅரைக் களஞ்சு இரசமிட்டு அதின் மற்றக் கெந்தகமிட்டு அதின் மேலே அரைக் களஞ்சு செப்புச் சல்லியிட்டு அதின் மேலே வெள்காயப் பூடு நறுக்கி வைத்து முன்னே வாங்கின கள்ளிச் சாற்றையிட்டு மூடி ஒரு சீலைமண் செய்து எரு முட்டைப் புடமாக வேக வைத்து எடுத்துக் கள்ளிச் சாறு எடுத்துப் போட்டு மருந்துள்ளது ஒன்றுகச்

சேர்த்து சிமிளிலே வாங்கி வைத்து நாளொன்றுக்கு ஒரு நெல்லிடை கொள்ளவும். குன்மந் தீரும்.

(வேறு) மூன்று காசிடை செப்புத் தகடு தட்டி ஒரு கொட்டக் கியிலிட்டு ஒன்றரைக் காசிடை நெல்லிக்காய்த் கெந்தகமும் பொடி செய்து போட்டு இரண்டு எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து சாறிற்று உலர்த்திப் பொடி செய்து ஒரு பருத்தி விரைப் பிரமாணம் பேயம் பழத்தில்வைத்து ஒமிக்க உச்சியம் பொழுது கஞ்சி காய்ச்சி தெளியா யிறுத்துக் குடிக்கவும்.

(கூவேறு) குன்மத்துக்கு குடிநீர்:- சிம்பிலி*பாலரசம் பட்டை, ஆறு கழஞ்சு பெரு மருந்து வேர் முக்கழஞ்சு, சுக்கு கழஞ்சு, நாழி தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி இரண்டு நேரமும் குடிக்கவும். தீர்கும்.

வேறு. வாய்வு குன்மத்துக்கு:- திப்பிலி, கூவிளை வேர், மஞ்சள், மர மஞ்சள், கடுக்காய், தானிக்காய், சாறடை வெள்ளைச் சாறடை, அரப் பொடி, முத்தக் காசு, வட்டத் திருப்பி வேர், விழலரிசி, தேவதாரம், தேள்க் கடை, சிறு தேக்கு, ஆக யிந்த வகை மருந்து தன்னி லொக்கக் கூட்டி பசுவின் பால் வார்த்தரைத்து பசுவின் நெய்யிலே கூட்டிக் குழப்பி நாளொன்றுக்கு இரு களஞ்சு நக்க இடவும்.

இதுவும்:- சுக்கு நாற்களஞ்சு, இந்துப்பு நாற் களஞ்சு, திப்பிலி நாற்களஞ்சு ஆக இந்த மருந்து சரி கூட்டிப் பொடி செய்து இஞ்சிச் சாற்றில் குழைத்து ஒரு களக் கொட்டிப் பிரமாணம் கொள்ளவும். வாய்வு குன்மம் தீர்கும்.

(வேறு) வாதகுன்மம், வலி குன்மம், எரிகுன்மம், ஒக்காள குன்மம், உவாந்தி குன்மம், சேற்றும குன்மம், சத்தி குன்மம், பித்த குன்மம், சோனைக்குழிப்பை நீரும்பல், நீர்க் குருவான், பெரு வயிறு. அகுவை வெப்புப் பாவை, குடல் வாதம், எதிக்க விசை, இறணை சோகை, அவுகை கிளிசை, குடல் விப்புருதி, உதிர குன்மம், அக்கினி மந்தம் ஆக இந்த வகைக் கெல்லாம் மருந்து:-

சிற்றரத்தைக் கிழங்கு, சிறு குறிஞ்சில் வேர், ஒடுவி வேர், நன்னாரி வேர், பெரு மருந்து வேர், அப்பைக் கிழங்கு, ஆதன்டை வேர், அரிஞ்சில்வேர், பிராய் வேர், சிறுகிளா வேர், காட்டு மல்லிகை வேர், சத்தி சாறடை வேர், முக்கிரட்டை வேர், உத்தம தாளி வேர், கொடுவேலி வேர், செங்கத்தாரி வேர், மிளகு, கரந்தை வேர், நத்தைச் சூரி வேர். கழுக் கொட்டி வேர், சிறு குறட்டை வேர்க் கிழங்கு, கடைச் சரக்கு வேர்க் கொம்பு, மிளகு, வெங்கா வுள்ளி, கருஞ்சீரகம், சன்ன சாலைக், கடுகு, இந்துப்பு, நேர்வாளம், குடசப் பாலைப் பட்டை, சீனக் காரம், நவச்சாரம், கல்லுப்பு, செங்கொட்டை ஆக யிந்த வகைக் காட்டு மருந்தும் கருக வறுத்துப் பொடி செய்து கடைச் சரக்கும் வேறே கருக வறுத்துப் பொடி செய்து இரண்டு பொடியும் ஒக்கக் கூட்டி வைத்து இந்த வியாதி யவர்களுக்குத் தக்கதாக பனைக் கருப்பட்டி முன்னே கொண்டு ஒரு வெரு கடிப் பிரமாணம் மருந்து உள்ளே கொள்ளவும்.

Incomplete

(வேறு) உதிர குன்மம், அக்கினி மந்தத்துக்கு மருந்து.

பொன் முசுட்டை வேர், ஆயில் பட்டைப் புங்கந் தோல், முக்காவேளை வேர், நாய் வேளை வேர், சாறணைக் கிழங்கு, சத்தி சாறணை வேர், சிறு மூலகம், வெள் காரவுள்ளி, செவ்வியம், கொடி வேலி, வேர், கரு வேப்பந் தண்டு சுக்கு இவை ஒரொன்று நாலு பலம் கொண்டு இரு நாழி நீர் விட்டு எட்டி லொன்றுக்கி மோர் குழம்பு ரெட்டி இதக்குச் சாறு கையாந்த கரை பொடுதலை முருக்கிலை, குப்பை மேனியிலை சாறணையிலை நெரு (முடிவு இல்லை)

மகாராச குக்குல கிருதம்.

தேவதாரம், அதிமதுரம், முத்தக் காசு, முன்னை வேர்ப் பட்டை, நன்னாரி வேர், சுக் கு. திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி, நாகப்பூ, தாளிச பத்திரி, காட்டெருமைப் பால் இதுகளெல்லாம் குறுணி நெய்க்கு ஒரொன்று நாற் களஞ்சு கூட்டி முன் வைத்து

எட்டுப் படி கஷாயமும் அரைத்துக் கூட்டிக் கொண்டு நெய்யும் இந்தக் கஷாயமும் வார்த்து இந்தச் சரக்கெல்லாம் அரைத்து வெள்ளாட்டுப் பால் குறுணி கூட்டி அஞ்சு நாள் சிறு தெரியிட்டு சாயங்காலம் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

(வேறு)

முக்குறுணி நாழி நெய்க்கு பலம். க, சிற்றரத்தை, சதகுப்பை, கடுகுரோகணி, தேவதாரம், கச்சோலம், சாதிக்காய், இலவங்கம், கார்போகரிசி, கிரும்பு, வெள்ப்பாலை அரிசி, மரமஞ்சள், அத்திப்பிலி, மூலம், வசம்பு, மிளகு, மஞ்சள், இந்துப்பு, கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, வெள்ளை வெங்காயம், பெருங்காயம், வெருந்தப் பிசின், பூத கரப்பான், மகிழம் விரை, கடுக்காய், நெல்லி முள்ளி, தான்றிக்காய், நீர் வெட்டிக் கொட்டை, ஈர வெங்காயம், செங்கழுநீர்க் கோஷ்டம், அதிமதுரம், ஏலம், செவ்வியம், காசுக்கட்டி, அதிவிடையம், நயனவிரை, கற்றட்டி ஆக இந்தக் கடைச் சரக்கு ஒரொன்று நாழி நெய்க்கு கழஞ்சு இதவும் வெட்டு மருந்து வெள்ளறுகு சமூலமும், பேய்ப்புடல், சமூலம் தூதுவளை சமூலம், சங்கு சமூலம், கண்டங் கத்திரி சமூலம் செங்கத்தாரி வேர், மிளகு சாரணை பெரு மருந்து சீந்தித் தண்டு புங்கம் வேர் சிற்றவரைக் கிழங்கு, சத்தி சாறடை, மின்புறல், கூவளை வேர், ஆனை முன்னை வேர், ஆனைக் காட்டுக் குறிஞ்சிலி வேர், சிற்று மல்லி, பேராமல்லி, ஆவிரி வேர், ஜடா தோடை, வல்லாரை, பொன் முசுட்டை, செம்முள்ளி, இலைகோழி அவரையிலை, பிரமி கற்பூர வள்ளி இலை, பொடுதலை, சங்கங் குப்பி யிலை சின்னியிலை, மணத்தக்காளி யிலை, நூறு வருஷஞ் சென்ற வேப்பம் பட்டை இந்த வேப்பம் பட்டையை இடித்து குறுணி தாளியில் போட்டு இரு நாளி கொள்ளும் போட்டு வேடு கட்டி முக்கிலவைப் பிட்டாக வேக வைத்துக் கொள்ள முந்தின வெட்டு மருந்துடனே வேப்பம் பட்டையும் இரு நாளி நெல்லிடை கூட்டிக் கொண்டு நெய் வடிக்கவும்.

(வேறு) மைபலாதி முக்குள நெய் பண்ண.

மாவிலங்கம் வேர், சீந்தித் தண்டு, சிறு வழுதிலை, ஆனை வேர், புங்கம் வேர், ஆயில் பட்டை, நொச்சி வேர், தழு தாழை வேர், பாதிரி வேர், ஆனை சுவிளை வேர், ஆனை வேர், கொடு வேலி வேர், நெரிஞ்சில் வேர், சிவதை வேர், தவசி முருங்கை வேர், தன்னி மிட்டான் கிழங்கு, ஆடாதோடை வேர், நீலச் சோதிக் கிழங்கு கருங்காலி, சிவனார் வேம்பு, மலை வேம்பு வேர், பேய்ப்புடல், சிற்றுமல்லி, பேர் மல்லி, சிறுகிளா உவாய்ப் பட்டை; நாயுருவி வேர், பெருங் கிளா வேர், பெரிய வாகை வேர், ஆனை குமிளம் வேர், குளலா தண்டை பட்டை, நாகாந்தி வேர், சிற்று மணக்கு காட்டா மணக்கு வேர், முக்காவளை வேர், இலைக் கள்ளி வேர். நன்னாரி வேர், பெரு மருந்து வேர், சங்கங் குப்பி வேர், சாறடை வேர், முக்கிரத்தை வேர், இன்புறல் மழு வண்ணக் குறிஞ்சிலி, தாமரை வளையம், வெட்டி வேர், சங்கம் வேர், கண்டங் கத்திரி வேர், ஒரொன்று நாலு பலங் கொண்டு முக்கலனே நாளி நீர் வார்த்து பத்து மரக்காலாக் காச்சி நாலு பலம் சந்தனம் இடித்து பதக்கு தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சிக் கொள்ள.

இதவும்:- வெள்ளாட்டுப் பால், பசுவின் நெய், க்கு அரைத்துக் கரைத்த மருந்து தேவதாரு, சிறு மூலகம், திப்பிலி, செவ்வியம், நற்சீரகம், கருஞ்சீரகம், அத்திப் திப்பிலி, வசம்பு, கோஷ்டம், மஞ்சட்டி, அசும தாகம், மிளகு கைச்சோலம், வெட் பாலை, அரிசி செங்கழுநீர் கோட்டம், சடாமாஞ்சில் அரத்தை, சதகுப்பை சாத்திர பேதி கம்பிப் பிசின், இந்துப்பு, நிலவேம்பு, வாலுளுவை, அரிசி முக்குல நாழிக் கொரு பலம் பசுவின் மாணில் கழுவி நூறு வருஷம் சென்ற வேப்பம் பட்டையில் சுத்தி பண்ணிக் கொண்டு முன்னே வெந்த கஷாயம் வார்த்து இந்தக் கடைச் சரக்கெல்லாம் நாழிக்கு களஞ்சு கூட்டிக் கொண்டு முக்குல கடைச் சரக்கும். இந்தக் கஷாயம் வார்த்து நேராக அரைத்து எல்லாம் ஒன்றாகக் கஷாயம் உள்படக் கூட்டி நாழிக்கு களஞ்சு சந்தனம் கூட்டி எரு காய்ச்சி தெரியிட்டு பதத்தில் வடித்து தானிய பிடித்தில் வைத்து இந்த

நெய்க்குத் தீரும் வியாதி விப்புருதி, இருகுடல் வாதம், பழுவறை பீலிகை, பாரப்பிள வை, கவிசைக் கிரந்தி, காதில் வியாதி, விஷபாகம், மூக்கு நீர்ப் பாச்சல், காயாகலாசம், நெஞ்சில் வியாதி, வாயு சூலை, மகுந்தீரு பவுத்திரம், கிரந்தி மூல வியாதி, பாண்டு ரோகம், முறுகு வேதினை, கண்ட மாலை இந்த வியாதி யெல்லாந் தீரும். வியாதி அறிஞ்சு நேர்வாளங் கூட்டவும்.

(வேறு) குக்குலு சூரணம்.

குக்குலு பலம்.க, கெந்தகம் பலம்.ரு, இரசம், மூக்களஞ்சு, திறிபலை, திரி கடுகு, ஒரொன்று கழஞ்சு, கருஞ் சீரகம், இரு களஞ்சு, வெருந்தப் பிசின், யிரு கழஞ்சு, சாறடை வேர் இரு களஞ்சு இதெல்லாம் வஸ்திர காயம் பண்ணி ஆறுக்கு கிரந்தியருக்கு வேப் பெண்ணை, தேன், நெய்யிலே இட்டு வரவும்.

(வேறு)

ஒட்டிய புண், மண்டை சூலை, கெந்த தாளி, உள் பட்ட வியாதிக்கு தயிலம்.

நொச்சில், கரு நொச்சில், ஊமத்தை சிவந்த ஊமத்தை, சாறடை சந்தி சாறடை, கொடு வேலி, செங்கொடு வேலி, சங்கிலை, சங்கங் குப்பி, தக்காளி, மணத்தக்காளி, வெருப்படக்கி, ஆடா தோடை கோழி அவரை வேலிப் பருத்தி பழம் பாசி, தழுதாழை தூதுவிளை; பாவட்டை ஆக பச்சிலை இருபது ஒரொன்று குறுணி மருவாதி ஒரு நாளே பறித்து வந்து குலைச்சுச் சாறு கொண்டு இந்தச் வெள்ளிய சீலையில் முழக் கிழிச்சு, அதிலே இந்தச் சாற்றைத் தோய்த்து நிழல் உலர்த்தாக உலர்த்தி ஆறு காசிடை கெந்தகம் ஆற்கப் பொடி பண்ணி முந்தின சீலையில் திரிச்சு வெள்ளாட்டுப் பால் கொண்டு வந்த நாமே காச்சிக் கடைந்த அந்த நெய்யிலே இந்தச் சீலையை ஒரு இருப்புச் சலாகையில் மடித்து தொங்கப் போட்டு நெய் தோய்த்து தயிலமாக விழவிருத் அந்த தயிலத்தை பரணியி லடைத்து ஒரு பணவிடை தயிலம் சுத்தி பயறத்தனை இரசம் சுத்தி முறிச்சு வியாதி யாளனை பாக்கைச் சீவிப் போட்டுக் கொள்ளச் சொல்லி வெற்றிலையில் தடவித் தின்ன இப்படிப் பத்து நாள் தின்ன இதுக்கு மண்டை சூலை, ஒட்டிய புண், மேற்கவிசை, கீழ்க் கவிசை, வளமிச்ச வியாதி எல்லாம் தீரும்.

(வேறு) சாதிக்காய் நெய்.

பீக்கிலைச் சாறு, புடோலிலைச் சாறு, தெ.மஞ்சள் சாறு தெ.மாஞ்சில். நன்னாரி வேர், புகட்டி பதமாக வடித்து புரையான் புண்ணுக்கு வர திரிக் கட்டி ஒற்றவும். வளியான்னுக்கு தோய்த்துப் போடவும். (மறு பக்கம் அடிக்கப்பட்டுள்ளது)

கடுக்காய் நெய்.

கடுக்காய் ரு, சுக்கு பலம் ரு மிளகு பலம்.ரு, திப்பிலி பலம்.ரு, கடுகு ரோகணி பலம்.ரு, இந்தப்பு பலம்.ரு, காந்தம் பலம்.ரு, கருஞ்சீரகம் இரு களஞ்சு, வசம்பு இரு களஞ்சு, செங்கழுநீர் கோட்டம் களஞ்சு, ஏலம் களஞ்சு, தவர்க்கிட்டாம் .ரு கழஞ்சு, அரைப் பொடி பலம்.க, நெல்லி முள்ளி களஞ்சு தான்றிக்காய் களஞ்சு, கடுகு களஞ்சு, சதகுப்பை களஞ்சு, சாதிக்காய் களஞ்சு, நேர்வாளங் கொட்டை யரு, அவிரியிலை, புளி யிலை சங்கு, ஊசி மல்லிகை, கையாந்த கரை, பொடுதலை பிரமியிலை கீழ நெல்லி, தூதுவளை, கற்றாழை சாறடை சமூலம், நெய், உரி அரைத்து கரைத்துப் பதத்தில் வடித்த நக்க இதுக்குப் பாண்டு ரோகம், வீக்கம், விஷப் பாகம், காமாலை, சோகை, காசம் இவை தீரும். (குமரனே துணை, வைத்தீஸ்வர சுவாமி ரட்சிக்க வேணும்)

பிறந் காமாலத் தயிலம். நெல்லிக்காய் எண்ணெய்.

நெல்லிக்காய்ச் சாறு.ரு, கையாந்த கரைச் சாறு.ரு, பசுவின் பால்.ரு, எண்ணை ரு, இதுக்கு மருந்து அதிமதுரம் பலம்.உ, வெட்டிவேர் பலம்.க, மஞ்சட்டி பலம்.க, இலாமிச்சம் வேர் பலம்.க, நல் சந்தனம் பலம்.க, சுக்கு பலம்.ரு, எல்லாம் இடித்து அந்தக் கஷாயம்

வார்த்து அரைத்து என்னை கஷாயம் எல்லாம் ஒன்றாகக் கட்டி பதத்தில் வடித்துத் தலையில் வார்க்கக் கண் புகைச்சல், பல் வலி, காது கேளாதருக்கும், பயித்தியம் இவைகள் தீரும்.

(வேறு) குமரித் தயிலம்.

கற்றாழைச் சாறு, த, பொன்னாங் காணிச் சாறு. கையாந்தகரைச் சாறு.ஸ, பால்.த, என்னை.ஸ, தகரம் இலாமிச்சம் வேர், அகில், அதிமதுரம், ஏலம், இலவங்கம் இலவங்கப் பத்திரி, நாகேசுரம், மஞ்சட்டி, நன்னாரி வேர், முத்தக் காசு, சுக்கு, நற் கோலம், சாதிக்காய் இதெல்லாம் பலம்.உ, அரைத்து கரைத்து பதத்தில் வடித்து தலைக்கு வார்க்கச் சிற வாய்வு, தலைவலி தீரும்.

(வேறு) பூசணிக்காய் நெய்.

பூசணிக்காய்ச் சாறு 4, நெய் 4, இதில் அரைத்து கரைக்கு மருந்தும். பாலை வேர், இலவங்கத் தோல், ஏலம், பச்சிலை இலாமிச்சம், வெட்பாலையரிசி, கொத்த மல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகரோகிணி, நெல்லி முள்ளி, தான்றிக்காய், முந்திரி கைப் பழம் இந்துப்பு, தேவதாரம், அமதாகம், சிறு தேக்கு, முத்தக் காசு, அமுக்கிரா வேர், கோட்டம் இவை ஒரொன்று நாற்கழஞ்சு அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து கண்டு சர்க்கரையும் நாழி போட்டு தேன் நாழியும் போட்டு நக்க இரக்த பித்தம், தாக சுரம் இவையும் போம். நீர்க் கடுப்பு, இரத்த பித்தம், மற்றும் தீரும்.

(வேறு)

பூசணிக்காய் சர்க்கரை, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், நெல்லி முள்ளி, செங்கழுநீர், கோட்டம் கிராம்பு, முந்திரிகைப் பழம் பேரீச்சம் பழம், நற்சீரகம், ஏலம் இது எல்லாம் ஒரொன்று பலம்.க, தான்றிக்காய் பலம்.ரு, கடுக்காய் பலம்.உ, இந்துப்பு பலம்.ந, இலந்தயம் பலம்.வ, வாய் விளங்கம் பலம்.ரு, நாகப் பத்திரி பலம்.ரு, கூகை நீர் பலம்.ரு, சாதிக்காய் பலம்.ரு, சர்க்கரை, தேன், நெய் இதுக்கு எலும்புருக்கி நீர்க் கடுப்பு உடம்பெரிப்பு தண்ணீர் உளலை உள்க் காச்சல், மூத்திரப் பாளம், மூத்திரக் கிரிச்சம், பயித்தியம். தலை தியக்கு தீரும்.

இரத்த பித்தத்துக்கு.

அதிமதுரம், பொன்னாங்காணி வேரும், நற்சீரகமும், பொன்னாங் காணி யிலைச் சாறு, வர்த்தரைத்து எருமை வெண்ணையில் குழப்பி உள்ளுக் கொடுத்துத் தலையிலுந் தேய்க்கவும்.

(வேறு)

நட்டு முத்தக் காசும், நற் சீரகமும், சுக்கும் கஷாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். மூக்காலும் விழுந்தால் கற்பூரமும் மஞ்சள் பொடியில் பொடி செய்து பரப்பி திரியாகத் திரிச்சு விளக்கில் கொளுத்தி அவிச்சு மூக்கில் பிடிக்க. ஈர வெங்காயச் சாறும் நெய்யும் கொடுக்கவும்.

பனை முட்டி, இரு நாழி தண்ணீரில் நாழு காசிடை விட்டுக் காய்ச்சி சீரகம் வறுத்துப் பொடி பண்ணி மேல்ப் பொடி தூவி நெய் விட்டு உள்ளே கொள்ள இரத்த பித்தந் தீரும்.

(வேறு)

அருகஞ் சாறு, செங்கழுநீர்க் கிழங்கு, மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம், வெள்ளருகு, இலாமிச்சம்; முத்தக் காசு, சந்தனம், தாமரை வளையம் முந்திரிகைப் பழம், அதிமதுரம் கண்ட சர்க்கரை இவை ஒரொன்று களஞ்சு கொண்டு பால் நெய் பொடி வடித்து நக்கவும். நசியம் பண்ணவும். செவி கண் லிங்கம், காலியம் பூசவும். சோறு தண்ணீர் அளிர ஊற்றிக் கொள்ள பத்தியம்.

வேறு.

அருகஞ் சாறு, நாழி, நெய் நாழி, உழக்கு பால், நாழி அதிமதூரம்; நாலு பலம் அருகம் வேர், நாற்களஞ்சு அரைத்து கரைத்து பதத்தில் வடித்து உள்ளுக்குங் கொடுத்து தலையிலும் வார்த்து நசியம் பண்ணவும். ஆடா தோடைச் சாறு உழக்கு, சந்தனம், களஞ்சு, சுக்கு களஞ்சு, கண்டு சர்க்கரை களஞ்சு, நெய் மூழாக்குக் கூட்டி சிறுகரில குடிக்கவும்.

வேறு.

ஆடா தோடை வேர், சிவனார் வேம்பு வேர் இவை ஒரொன்று அரு களஞ்சு இரு நாளி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி நெய்யாகுதல் சர்க்கரையாகுதல் கூட்டிக் கொள்ளவும்.

வேறு.

கோவைச் சாறு, நரிப் பயறு, முசுமுசுக்கை இவை நாழி குங்கிலியம் பேய்ப்புடோல்; கடுக்காய், எலாம்பிச்சம் எண்ணை, நாழி கூட்டி பதத்தில் வடித்து வார்க்கவும்.

வேறு.

நாவல் கொழுந்தும் பட்டையும் அரைத்து பாலில் கரைத்து தோய வைத்துக் கடைந்து வெண்ணெயில் இலவம் பிசின் ஒரு பிடி பொடி செய்து குழைத்து முழுங்கவும். நாவல் பட்டை இடித்து தெள்ளிப்பிட்டு சுட்டு பிழிந்து பிழிந்த நீரில் அதிவிடையம் மேலப் பொடி தூவிக் கொடுக்கவும்.

வேறு.

ஏலம், இலவங்கம், அதிமதூரம், கூகை நீர், கண்டு சர்க்கரை, ஒரொன்று நாலு பலம், அத்தி முசிளி வெள்ளரி விரை யிரு வேலி வேர், முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம் இவை ஒரொன்று களஞ்சு இளநீர் வார்த்தரைத்து இளநீரிலும், கரும்பஞ் சாத்திரம், வெள்ளரியிலைச் சாத்திரம் கூட்டி இதில் இலவம் பிசினும் கூட்டிக் கொடுப்பது. இரத்தம் பித்தம் மாறும்.

விஷ பாகத்துக்கு.

சித்தா மணக் கெண்ணை நாழி, ஆகாச கெருடன் கிழங்கு, ஈர வெங்காயம், வெள்ளைச் சாறணை வேர், கருஞ்சீரகம், பூசுரி வேர், புட பத்திரி வேர், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், பசுவின் பால் வார்த்தரைக்கவும்.

குன்மத்துக்கு எண்ணெய்.

முடக் கொத்தான், பொடுதலை, வெண்டைச்சி, சாறணைக் கொழுந்து, கள்ளிச் கொழுந்து, வேப்பங் கொழுந்து, கடுக்காய் யரு, இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஓமம், பெருங்காயம், வாய் விளங்கம், சித்திர மூலம், ஒரொன்று விராகனெடை இரண்டு கள்ளிச் பருப்பு பலம்.வ, விளக் கெண்ணெய் படி.க,

முதியான் கூந்தல் எண்ணெய்.

முதியான் கூந்தல் சாறு .ச, விளக் கெண்ணை படி.க, செவ்வியம் சித்திர மூலம், அரத்தை, சதகுப்பை, கருஞ் சீரகம், நாய்க் கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, வெப்பாலை அரிசி, வாய் விளங்கம், தேவதாரம், விளக் கெண்ணை ஒரு படி எண்ணைக்கு கடைச் சரக்கு விராகன் இரண்டு கூட்டிக் கொள்ளவும். வெள்ளை வெங்காயம் பலம்.க இந்தச் சரக்கெல்லா மிடிச்சு எண்ணையில் போட்டு முறுகின பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

மந்த சன்னி திமிர் சன்னி தீரும்.

இரத்த பித்தத்துக்கு:- நாயுருவி பத்து நாலு பலம், இடித்து பதக்கு நீர் வார்த்து நாளியாக் காய்ச்சி இதில் கற்கம், கொடிவேலி,

வேர்ப் பிறந் தோல் நாழி, சுக்கு, மிளகு, திப்பிலி, நாகனந்தி வேர், இந்தப்பு சிவதை வேர், பங்கம் பாளை வேர், சிறு கஞ்சொறி வேர், புங்கந் தோல், ஆயில் பட்டை, மஞ்சள் கடுகு, நெல்லி, தான்றி, மர மஞ்சள், காட்டுக் கருணைக் கிழங்கு, புளி நரளைக் கிழங்கு இவை ஒவ்வொன்று களஞ்சு அரைத்துக் கரைத்து வெள்ளாட்டுப் பால் நாழி நெய் நாழி உழக்கு கூட்டுக் கொள்ளவும் தீரும்.

30.10.62.

வேறு.

நாயுருவி நாலு பலம் தறித்து நாழி நீர் விட்டு அடஞ்சு நாள்க் கய்ச்சி நாலொன் றுக்கி வடித்து யிதில் அரைத்து கரைக்கும் மருந்து கொடி வேர்ப் புறந் தோல், மிளகு, திப்பிலி வசம்பு, சிறு தேக்கு, இரு வேலி வேர், கருஞ் சீரகம், அசமதாகம், பெருங் காயம், ஆயில் பட்டை, கடுகு நெல்லி தான்றி இவை ஒரொன்று கால்க் களஞ்சு கொண்டு பசுவின் நெய் நாழி வெள்ளாட்டுப் பால் நாழியுங் கூட்டி வடித்து நக்கத்தீரும்.

வேறு.

முத்துக் காசு, பெரு மரத் தோல், புளியாரையும் இடித்துப் பிட்டாகச் சுட்டுப் பிழிந்து தேன் கலந்து அதி விடையமும் பொடி செய்து தூவிக் குடிக்க இரத்த சேஷமம் மாறும்.

வேறு.

இரத்த பித்தத்துக்கு:- மாம்பட்டையும், முத்தக் காசும் நனைத்துப் பிட்டாகச் சுட்டுப் பிழிந்து அதிவிடையமும், இலவம் பிசினும் மேல்ப் பொடி தூவிக் கொடுக்க இரத்த சேஷ மம் மாறும்.

வேறு.

சுக்கு, திப்பிலி, சீரகம் இவை ஒரொன்று நாலு பலம் பொடி செய்து ஏலம், இலவ வங்கம், சாதிக்காய், கொத்து மல்லி இவை ஒரொன்று இரு பலம் பொடி சீனி நெய் உ, இதெல்லாம் கற்க பண்ணி நாளென்றுக்குப் புன்னைக் காய் பிரமாணம் கொள்ளத் தீரும்.

வேறு.

வேப்பம் பூவும், சிறு பயறும் தன்னி லொக்க இரு நாளி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் கொடுப்பது.

வேறு.

அரைக்குஞ் சாறும், நெய்யும் கலந்து கொடுக்கவும்.

வேறு.

திருதியாமல் வெள்ளாட்டு இரத்தமும் தேனுங் கலந்து கொடுக்கவும்.

வேறு.

முசுமுசுக்கை வேர் ஒரு பிடி பிடுங்கி எலுமிச்சங் காயளவு அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும். வயிறு எரிச்சல் நிற்கும். பசுவின் நெய் உழக்கில் ஒரு விராகனிடை கொம் பரக்குப் போட்டு ஊறிக் கலந்து ஒக்க அரைத்துக் கரைத்துக் கட்டிக் கொடுக்கவும்.

<u>கண்ணுக்கு உண்டை.</u>

பஞ்ச லோக ரெத்தக்கி நத்தம் துரிசு, கடுக்கய்கற்பூரம், புளியம் பூ, மாட்டுத் தலை, ஒரு முத்து பவளம், வெங்கலப் பொடி, செம்புப் பொடி, அரப் பொடி, பொன், வெள்ளி சமனக கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உண்டை பண்ணி நிமலிமூர்த்தி காசம் படலம் திமிர்ப்பு இதுக்கு யிடத் தீரும்.

வேறு.

கண்ணுக்கு வேப்பம் பிசின், மடல் துத்தம், சங்குப் பொடி இந்த மூன்று மருந்தும் எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உண்டை பண்ணி அமரத்துக்கு நீராரை கற்றாளைக் குள் வைத்து பிடமிட்டு அந்தச் சாற்றிலரைத்துக் கண்ணிலிடக் கல் லேவுக்கு முலைப் பாலில் அரைத்து இடவும்.

வேறு.

துத்தம் வெண்கலப் பொடி, அதிமதுரம், திப்பிலி, கடுக்காய், பச்சைப் பாக்கு அல்லது களிப் பாக்கு, கையாந்தகரை, அரளி, உப்பு மண், பழம் புளி, வேப்பிலை, புளியிலை, முருக்கிலை தேள்க் கொடுக்கு இலை, தாமரைத் தண்டு, சாறணை யிலை, சங்கிலை இந்த எட்டு மருந்தும் தனித் தனியே சாறு கொண்டு வெள்ளைச் சீலையிலிட்டு மருந்துக்கு ஒரு நாளாக நிழலிலுலர்த்தி நல்லெண்ணெயில் மை பற்ற வைத்து முன் சொன்னக் கடைச் சரக்கும் இந்த மையும் எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உருண்டை கட்டிக் கண்ணிலிடவும். அல்லது அரைச்ச மருந்துடனே எருமை வெண்ணெய் போட்டு கலந்துடனே கலந்தெய்த்து சிமிழிலடைத்துக் கண்ணிலிடவும். காசம் படலம், திமிர்ப்பு கண்ணோய் இவை தீரும்

## கண்ணுக்கு உண்டை.

இறண சுக்கிரனுக்கு:- அமரம் பத்தின கண்ணுக்கு:- கண்ரேவுக்கு பூப்பறிய:-

நெடு நாள்ப் பட்ட பூவுக்கும் பூ மாற:- துத்தம், துரிசு பொடி பண்ணி கலத்திலிட்டு சிடாய் மூத்திரம் வார்த்து சங்கு கொண்டு மத்திச்சு சுத்தி மெழுகு பதமான பக்குவத்தில் ஆட்டு வெண்ணெ கூட மத்திச்சு சிமிழிலடைத்துக் கண்ணிலிட இறண சுக்கிரனும் பூவு மாறும்.

வேறு.

செம்பு பொடி, கடல் நுரை, மஞ்சள், கோரோசினை, சங்கு, ஏலம், சந்தனம், மாடசிவம், வங்கம், தேத்தாங் கொட்டை, அதிமதுரம், சமுத்திராப் பழம், வெள்ளைக் காக்கண்டம் விரை, துத்தம், துரிசு, காந்தம் இவை யெல்லாம் சமன் கூட்டிப் பசுவின் பால் வார்த்தரைத்து கண்ணிலிடவும். நுனிப் பூவு மாறும்.

வேறு.

வெள்ளைச் சீலையில் சதுரக் கள்ளிப் பால் நாலு சிலவு ஊட்டி உலர்த்திச் சட்டியைக் கரிய வைத்து வறுத்து துத்தம், துரிசு சமன் கொண்டு இந்தக் கரியும் வட்டியிலிட்டு பசுவின் வெண்ணெயிலிட்டு வட்டிலோடு வட்டிலிலொத்து எடுத்து சிமிழிலடைத்துக் கொள்ள. புழு வட்டுக்கும் பிரிந்த கண்ணுக்கு மிட இரண்டும் குணமாம்.

வேறு:

அமரம் பத்தின கண்ணுக்கு கண்ரேவுக்கும்:-

மடல் துத்தம், சங்குப் பொடி, நீராரையிலை இந்த மூன்று மருந்தும் எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து உண்டை பண்ணி முலைப் பாலிலிடத் தீரும்.

வேறு.

பூப்பறிய:- கடல் நுரை, சங்கு, தேத்தாம் விரை, மருதோன்றியிலை, திப்பிலி, திப்பிலி, கோழி முட்டை, ஓடு, மனிதன் தலை ஒடு இவை ஒவ்வொன்று தன்னிலொக்கக் கொண்டு தேன் வார்த்தரைத்து உண்டை பண்ணி நிழலிலுலர்த்தி தாக உலர்த்தி தேனிலுரைத்து கண்ணிலிடப் பூ மாறும்.

## நெடுநாள்ப் பட்ட பூவுக்கும் பூ மாற.

செம்புப் பொடி, அரைப் பொடி, கோழி முட்டை ஓடு, சங்கு செப்பு, நெரிஞ்சி வேர், இவை தன்னிலொக்கக் கொண்டு பசுவின் பால் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு மண்டலம் பனை முட்டைச் சாற்றில் உரைத்து யிட நாறு வருஷம் சென்ற பூ மாறும்.

வேறு.

காசத்துக்குப் புகை உண்ண:- அரிதாரம், சிறு தேன் மெழுகு தண்ணி மிட்டாணியிலை, அரைத்து உருண்டையாக்கி புளியந் தணலில் புகையிடப் பித்த காசம் போம்.

வேறு.

சந்தி ரோகையம்:- பச்சைக் கற்பூரம், முத்தக் காசு, பலகறை, நெல்லி முள்ளி, தான்றிக் காய், கடுக்காய், துத்தம், மஞ்சள், மர மஞ்சள், ஏலம், அதி மதுரம், வெள்ளி லோத்திரம்,

பொன், வெண்கார மணி, முத்துப் பவளம் இரத்தின் தங்கம், பீதரோசனி பன்னீர், கிராம்பு அரிசி இத்தனையும் சமன் கூட்டி கொம்மட்டி மாதளம் பளச் சாறு வார்த்தரைத்து நெய் யுந் தேனும் சமன் கூட்டி கலத்தோடு கலம் தேய்த்து உறவு செய்து உடனே சூரிய புடம் வைத்து சிமிளிலடைத்து கண்ணிலிட திமிரங் காசம் ரண சுக்கிரன் மாலைக் கண்ணிலில், சூடு படல முட மயிர்நத்தைப் படலம் சதை வளத்தி இவை தீரும். படலம், ரண சுக்கிர னுக்கு துரிசு கழஞ்சு துத்தமிரு கழஞ்சு கொத்தாளம் காய், நாற்கழஞ்சு வெள்ளைக் காக் கண்டம் வேர் கழஞ்சு இது எல்லாம் பனை மட்டைச் சாறு வார்த்து நேராக அரைத்து உண்டை சேர்த்து நிழலுலத்தாக உலத்தி கண்ணிலிட ஆணிப் பூ படலம் சூடு வளத்தி மினி மினிங் கி இவை தீரும்.

(வேறு)

சாளக்கம், பளிங்கு கல்லு சங்கு சீனிக் காரம் கடல் நுரை இதெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு வார்த்திரைத்து நிழலுலத்தாக உலத்தி முலைப் பாலில் கண்ணிலிட பூ நோவு மாறும்.

(வேறு)

சோழியன் எள்ளு உதையத்தில் ஊறப் போட்டு அந்த எள்ளு ஊறின தண்ணீர் கலத்தின் பிறத்தில் குத்தி அம்பட்டன் தீட்டுக் கல்லுக் கொண்டு உரைத்து ஒரு சட்டியிலே குறுணி தனலிட்டு இந்த தனலிலே வெள்ளை வெண் காயச் சருகு வேப்பிலைச் சருகும். அசம தாகமும் ஒரு செங்கொட்டையும் நறுக்கிப் போட்டு இந்தப் புகையிலே முன் உரைத்த மருந்தைப் பிடி உணர்ந்தவாறே பசுவின் வெண்ணெ போட்டு குழைத்து சிமிளில்டைத்துக் கண்ணிலிட நொந்த கண் பொறுக்கும்.

(வேறு)

துரிசு, துத்தம், தாமரைத் தாது இந்துப்பு, விகு புக்கைக் கட்டி, சங்குப் பொடி தேற்றான் கொட்டை கடல் நுரை இத்தனையும் எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து எலுமிச்சம் பழச் சாற்றில் கண்ணிலிடவும்.

(வேறு)

கடுக்காய்ப் பருப்பு-பஉ, மிளகு.ரு, திப்பிலி.ங, நெல்லிக்காய்ச் சாறு வார்த்த ரைத்து உண்டை பண்ணிக் கண்ணிலிடக் காசம் படம் தீரும்.

(வேறு)

இரத்தகுதி உண்டை:- பொன்இ, வெள்ளி, முத்துப் பவளம், மாணிக்கம், கோமதேகம், புஷ்ப ராகம், பச்சை வயிரம் இவை கூட்டிப் பொடி செய்து பச்சைக் கற்பூரம் கூட்டி தேன் வார்த்து அரைத்து கவறு செய்து தேனிலுரைத்திட கண்ணில் வியாதி எல்லாந் தீரும். இந்த உண்டை முலைப் பாலிலிடவும்.

(வேறு) கண்ணில் பூ மாற.

வெண் கல்லு வறுத்துப் பொடி செய்து மிளகு ஒரு கூறும், கையாந்த கரை நிழ லுலத்தாக உலத்திப் பொடி செய்து இந்தப் பொடி ஒரு கூறும் அன்றைத் தேன் வார்த்து இழைத்துக் கண்ணிலிட கண்ணில் பூ மாறும்.

(வேறு) மாலைக் கண்ணுக்கு:- மணிலம் விரை நீரிலுரைத்திட மாறும்.

கண்ணுக்குச் சந்திரோதயம்:- கடுக்காய்ப் பருப்பு, கருளப் பருப்பு, வசம்பு, செங்கழு நீர்க், கோஷ்டம், திப்பிலி மிளகு தான்றிக் காய்ப் பருப்பு, சங்கு பொடி, மனோ சிலை இதெல்லாம் சமனுக்கிக் கூட்டிப் பொடி செய்து இதுவும் வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்து உண்டை பண்ணிக் காசம் படம் திமிர்ப்பு, அநுபானமறிந்து இட.

வேறு.

சுக்கு, மிளகு, திப்பிலி, புங்க விரை, மர மஞ்சள், நல்ல மஞ்சள், இந்துப்புக், கடல் நுரை, சிற்று மணக்கம் விரை, வில்லைப் பத்திர்பழம் இது எல்லாம் சமனுகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து பருங்க வருகப் பண்ணி காசம் படலம், திமிரம், எலி கடி, பாம்பு கடி, பிசாசு, சன்னி இவை தீரும்.

மந்த காசம் மந்தல் :- வேப்பம் பிசின், துத்தம், சங்குப் பொடி, இந்த மூன்று மருந்தும் வெள்ளாட்டுக் கோமியம் வார்த்தரைத்து ஓடு வளர்ந்தது நீர்ப் பாச்சல், பூ விடத் தீரும். மடல் துத்தம் , எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து காச்ச அந்தக் காச்சின நீ இதை தரையிலே போட்டு பசுவின் வெண்ணெயும் போட்டு இழைச்சு சிமிளிலடைத்து கண்ணிலிடப் பூப் படலம் திமிரம் தீரும்.

(வேறு)

கன்றுக் குண்டை துத்தம்.க பலம், ஒரு இதழ்த் தாமரை .ச, பலம், முற்றின நெல்லி முள்ளி ய , பலம், காரீயம் .வ, பலம் ஆக இவை கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து இரண்டு நாள் பாலுங் காடியும் வார்த்து அரைத்து உண்டை பண்ணி நிழலுலத் தாக உலர்த்தி முலைப் பாலில் கண்ணிலிட கண்ணிலுள்ள வியாதி எல்லாந் தீரும்.

(வேறு)

துத்தம், செம்பு, பொடி பொன்னுங் காணி வேர்க் கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, காரீயம், ஆக இவை சமன் கூட்டி காடி வார்த்தரைத்து செம்பு புறத்தில் தப்பி திரும்பக் காடி வார்த்தரைத்து கவறு சேர்த்து காடியிலிட இரண கெற்பம் மாறும்.

(வேறு) இளநீர்க் குழம்பு.

கோமூத்திரம் நாழி, இளநீர் நாழி இது இரண்டையும் கூட்டி வடித்து வெள்ளைக் காக்கண்டான் வேர், நாற் கழஞ்சு அதி மதுரம் நாற் கழஞ்சு இது இரண்டையும் கூட்டி வடித்து ~~வெள்ளைக் காக்கண்டான் வேர் நாற் கழஞ்சு, அதி மதுரம் நாற் கழஞ்சு இது இரண்டை~~யும் அரைத்து இளநீர் கரைத்து பின்னேயும் மூன்று வடி வடித்துக் காச்சி இறுகின வாறே எலுமிச்சம் பழச் சாறு ஒரு காசுளவு பிழிந்து பச்சைக் கற்பூரங் கலந்து கொள்ள இதுக்குப் பல காசமும், வெள்ளெழுத்தும் போம்.

(வேறு) செவ்விள நீர்ச் சாறு.

அத்தமட்டைச் சாறு.ஸ, மரமஞ்சள், அதி மதுரம், பொன்னுங் காணி, வெள்ளைக் காக்கண்டம் வேர், ஏலம் இவை ஒவ்வொன்று ஒரு பலம் இதெல்லாம் அரைத்துக் கரைத்து மூன்று நாள் சிறு கொதியிட்டு காய்ச்சி தேன் கலந்து கற்பூரம் லேபிச்சுக் கண்ணிலிடக் காசம் படலம், திமிரம், வெள்ளெழுத்து இவை தீரும்.

வேறு.

இளநீர் பதக்கு ஒரு சட்டியிலே வார்த்து அதிலே இலாமிச்சம், மூத்தக் காசு, இரு வேலி வேர், பொன்னுங் காணி, சிறு கீரை, தாமரை வளையம், செங்கழு நீர்க் கிழங்கு, சங்கம் வேர், ஒரிலைத் தாமரை, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், சாத்திர வேதி, கிராம்பு, பேரீஞ்சு, முந்திரிகைப் பழம் இவை எல்லாம் ஒரொன்று இரு களஞ்சு இடித்து தூளாக்கி இளநீரில் கூடப் போட்டு காய்ச்சி பதக்கும் நாழியாகச் சுவறின வாறே இறக்கி ஆறின பின்பு பிசைந்து பிழிந்து சீலை வடி கொண்டு, பின்பு தேன் விட்டு சிறு குழம்பாக காஞ்ச வாறே பதஞ் சொரைத்து வெத்தாயத்தால் அதிலே ஒக்க தொத்தி வந்தால் அந்தப் பக்குவத்திலே இறக்கி அகலி கலத்திலே வார்த்தி இதிலே துத்தம் இரு களஞ்சு, சூரிசு இரு களஞ்சு, இந்துப்பு இரு களஞ்சு, பச்சைக் கற்பூரம், இரு களஞ்சு, ஆறகப் பொடி செய்து இட்டு கலதிதோடு கலம் அஞ்சு நாளிகை தேய்த்து ஒரு பீங்கான் பரணியிலே செப்பு பாத்திரத்திலாகுதல் அடைத்து வைத்து கண்ணிலிட பித்த கசம், நீல காசம், வறக் காசம், குமார காசம், வெள்ளெழுத்து, மூட மயிர் புழு மேச்சல்இளி கண் புல்லம் நன குலை நயனத்தில் வாதம் இறண சுக்கிரன் மேகவலி இவை எல்லாந் தீரும். அந்த குழம்பு உலந்தால் தேன் விட்டுக் கொள்ளவும்.

(வேறு) கண் வலிக்கு தலை வலிக்குப் புகை.

பெருங் குறெட்டைப் பழம் நன்றாய் உலர்த்தி பொடி பண்ணி சீலைத் துணியில் பரப்ப திரியாக உருட்டி விளக்கில் கொளுத்தி ஊதிப் போட்டு புகையை நாசியில் பிடிக்க வலி நிற்கும்.

(வேறு)

சிதேவியார் செங்கழுநீர் நெய்-வறட்சிக்கு:- அரக்கும், கருங் குங்கிலியமும் பொடி பண்ணி சீலையில் பரப்பி திரியாய் உருட்டி விளக்கில் கொளுத்தி அவிச்சுப் போட்டுப் புகையைக் கண்ணில் பிடிக்க வலி நிற்கும்.

சிதேவியார் செங்கழு நீர்ச் சாறு நாழி, சீந்தில் தண்டு சாறு நாழி நெய் இரு நாழி, பசுவின் பால் இரு நாழி அரைத்து கரைக்கும் மருந்து. சிதேவியார் செங்கழு நீர் வேர், இரு வேலி வேர், ஏலாம் பிச்சம் வேர், சந்தனம், கருகு ரோகணி, நாகப்பூ, செங்கழு நீர்க் கிழங்கு, தாமரை வளையம், செண்பக மொட்டு அதிமதுரம், கோஷ்டம், ஏலம், இலவங்கம் நன்னாரிவேர், சதகுப்பை, முத்தக் காசு, தண்ணி மிட்டாள் கிழங்கு, கிரும்பு, மஞ்சட்டி இவை யெல்லாம் நாழிக்கு ஒரொன்று களஞ்சு கட்டி அரைத்து கரைத்து பதத்தில் வடித்து தலைக்கும் வார்த்து உடம்புக்கும் பூசவும். இதுக்கு பள வெதுப்பு, உள் வெக்கை, காலெரிப்பு, கீ புகையெரிப்பு, வறட்சி இவை யெல்லாந் தீரும்.

(வேறு) சகலமான பீசித்துக்கு என்ணெ நெய்:-

மூன்று சிரங்கைப் படியிலே என்ணெ படி.க, மிளகு படி.ரு, நாழுமுளி மஞ்சள் படி .ரு, பத்துப் படி தண்ணீரில் போட்டு நாலு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு சிற்று மட்டி வேர்ப் பட்டை அந்தக் கஷாயம் விட்டு பரு நாற்த்தங் காயளவு அரைத்துக் கரைத்து பசுவின் பால் படி இரண்டு விட்டு பதத்தில் வடித்து முழுக நாலு வகைப் பட்ட பீனிசமும் யிருமல் பக்ஷ ரோகம், கண் பலம் கண்ண விஷம், இது முதலான வியாதி எல்லாந் தீரும்.

(வேறு)

பத்து விராகன் படியால் பலம்.க, சிற்று மட்டி வேர் பலம். , மூன்று சிரங் காயப் படியால் தண்ணீர் படி.உள, இடித்துப் போட்டு எட்டு நாழிப்க் காய்ச்சி பிசைந்து பிளிந்து வடித்துக் கொண்டு தேவதாரம் பல. , சிற்று மட்டி வேர்த் தோல் பலம்.க, அரைத்து கரைத்து என்ணெ படி.க, பால் படி , கூட விட்டு பதத்தில் வடித்துத் தேச்சு முழுக வாதி கஷ்டி நிறத்தபக்ஷ ரோமியம், மூக வாதம், நாலா வகை பீனிசமும், வியாதிகள் எல்லாந் தீரும்.

(வேறு)

பசுவின் நெய்.தெ, சுக்கு வாய் விளங்கம். கோட்டம், அதி மதுரம் ஒரொன்று விராகனிடை.உ, செம்பரத்தம் பூச் சாறுவது பசுவின் பாலாவது விட்டு அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து நாசிக்கு மூன்று துளியாக ஆறு துளி நெய் ஆக நாலு மூன்று நாள் நிறுத்தி அந்த என்ணெயும் முழுக சகலமான பீனிசமுந் தீரும்.

(வேறு)

கண்ட திப்பிலி கிறுதம்: ஆமவுகப் பயித்தியத்துக்கு கண்ட திப்பிலி கிறுதம்:- அருசி காய வாதம் இதுக்கு நெய்:-

திப்பிலி பலம்.சு, நெல்லி முள்ளி, கொத்த மல்லி, சீரகம், ஏலம், கிராம்பு, இலவங்கப் பத்திரி, நாகப் பூ, கடுக்காய், மிளகு, வெட்டி வேர், சடா மாஞ்சில், கருங் காலி வேர் இது வெல்லாம் சமன், தண்ணீர் மிட்டாள் கிழங்குச் சாறு நாழி பால் நாழி இது இரண்டும் நாழியாகக் காச்சி முப்பத்திரண்டு பலம் சர்க்கரை கட்டி முன் சொன்ன மருந்தும் பொன்னிறமாய் வறுத்து பெரும்பண்ணித் தூவிக் காய்ச்சிக் குழம்பாகிற பக்குவத்தில்நாழி நெய்யும், விட்டு இறக்கி ஆற்றி உரிய தேன் விட்டு முன் சொன்ன வியாதிக்குக் கொள்ள நிற்கும்.

(வேறு)

கற்பூரம், ரசம், திப்பிலி, வெண்காரம், செவ்வகத்திப் பூச் சாறு, வார்த்தரைத்துப் பூசலே பதம். அத்த நக்ஷத்திரலே கார்த்திகைக் கிழங்கு எடுத்து அரைத்து கையில் பூசி அவள் கையைப் பிடிக்கப் போகிக்கும்.

சர்க்கரையும், உத்தா மணிப் பாலுங் கூட்டி லேபிக்கத் தன்டு விம்மும். சாதிக்காய், வெள்ளெருக்கம் வேர்ப் பட்டை, கற்பூரம், கிராம்பு, சமுத்திரர்ச் சோகி விரை, பெரு நாகம் பூ, குங்குமப் பூ, சந்தனம் இவை ~~அ~~ சமன் கொன்டு இதுக்குக் கெல்லாம் சமன் மருந்து பல சரக்கும் மருந்தும் ஆக ஒரு பங்கும் அப்பிரக செந்தூரம் ஒரு பங்குமாக தேனி லரைத்துத். தேற்றும் விரைப் பிரமானம் உன்டை பன்னி ~~சாயங்காலத்திலே ஒரு உருன்டை பன்னி~~ சாயங்காலத்திலே ஒரு உருன்டை தின்னப் பாலுஞ் சோறும் முக்கா வயத்துக்கு உண்ணவும்.

தம்பளம். இடுமா மரம், புளிய மரம், மற்றுமுள்ள மரங்களிலே வைத்த வெட்டு வெளியன் குழவிக் கூட்டிலே அமைச்ச புழு முழவி உருவாகிற பக்குவத்திலே பத்தஞ்சு கிடைச்ச மருவாதிஎடுத்து ஒரு குழவிக் ~~கொன்டு~~** கொரு பணவிடை வென் காரங் கூட்டி அரைத்து நாய்ப் பாகலிலைச் சாற்றிலரைத்து உளுந்துப் பிரமானம் உன்டை பன்னி ஒரு உன்டை ஆற்றும சலத்திலே முதல் நாளே ஊறப் போட்டு பாக்கிலே சுண்ணம்பில் தின் பண்டத் தில் கொடுக்கவும்.

(௵)

## மஹரா விஷக தயிலம். வெங்கட பண்டிதது யோகம்:-

எட்டி பழச் சாறு ௲, முருங்கைப் பட்டைச் சாறு ௲ எருக்கம் பால் ௲, எலுமிச்சம் பழச் சாறு ௰, ஊமத்தைச் சாறு.௰, மாவிலிங்கையிலைச் சாறு.௰, சிற்று மணக்கிலைச் சாறு.௰, புளியிலைச் சாறு.௰, நொச்சியிலைச் சாறு.௰, துளசியிலைச் சாறு.௰, அமுக்கிறு யிலைச் சாறு.௰, களக் கொடியிலைச் சாறு.௰, துளசி யிலைச் சாறு.௰, உவாயிலைச் சாறு.௰, வாழைச் சாறு .௰, இஞ்சிச் சாறு.௰, பசுவின் பால்.௰, நெய்.௰, ஆமணக் கென்னை ௰, நல்லென்னை.௰, எட்டி விரைப் பொ.ய, வெள்ளுள்ளி வேதாரம், அதிமதுரம், இந்துப்பு கொடு வேலி, சத குப்பை, விரை திப்பிலி திப்பிலி மூலம் சந்தனம், ஏலம், இலவங்கம், நகம் (ஆவது முத்து சிப்பி போலே வரி வனியிருக்கும் தபசியள் கைப்பயிலிருக்கும்) தகரம், சடாமாஞ்சில், அரத்தை ஒரொன்று பலம், கூட்டி பதத்தில் வடித்து இட உள்ளுஞ் சற்றே கொடுக்கவும். எந்த வாதமுந் தீரும்.

## சுரகேசரி.

இரசம் விராகன்.உ, நாபி விராகன்,உ, நேர் வாளம் விராகன்,உ, வென் காரம் .உ, அரிதாரம்.உ., கெந்தகம் விராகன்.உ., கொல்ன் கொவ்வைக் கிழங்கு விராகன்.உ, பூலாங் கிழங்கு விராகன்.உ, சுன்டங் கத்திரி வேர்ப் பட்டை விராகன்,உ, முள்ளி வேர் பட்டை விராகன்.உ, செங்கழுநீர்க் கிழங்கு விராகன்.உ, கோரைக் கிழங்கு விராகன்,உ, செங் கழு நீர்க் கோஷ்டம், அதி மதுரம், கிராம்பு, சாதிப் பத்திரி, குரசாணி, ஓமம், சுக்கு, திப்பிலி, கடுகு ரோசனை, சந்தனம், சிறுநாகப் பூ, கருஞ் சீரகம், சாதிக்காய் வகை ஒன்றுக்கு விராகன்.உ, கையாந்த கரைச் சாறு வார்த்து அரைக்கவும். கோகுலாஷ்டமி அன்றைக்கு அரைக்கிறது. ஏழு நாள் மறத்தின் அநுப்பானம் துளசியும் கன்டங் கத்திரியும், புட்ட வியல் அவிக்கிற போது சீரகமும், திப்பிலியும் கூடப் போட்டுக் கொள்ளவும்.

அந்திக்கு கஷாயம் சிறு குறிஞ்சா வேரும், தலை சுருளி வேரும், சீரகமும், திப்பிலியும், இந்துப்பு கற்பூரம் இதற் கொத் ஆவின் வென்னையில் இளைத்தே.

ஐபந்துற்ற செம்பின் பிறத் தப்பி வைய்த்து பச்சைக் கிளிக் கோர் குத மெள்ள பேர் சித்தால், கொந்திக் கொதித்திட்ட ளிந்திட்ட கன்னில் கொள்ளுப் பிளவத்தினை இடுவீராய். அந்திக்கு வந்த சீலைப் பிளிந்து அந்த காரத்தை வெள்ளு யித்தநீஷத்ததாமே.

## வில்வாதி லேகியம்.

பட்டைப் போக்கி வில்வப் பத்திரி வேர்த் தூள் பலம்.சய, தண்ணீர்த் தூணி நீகிலிப் போட்டு குறணியாகக் காய்ச்சி இதில் பழ வெல்லம் ௰ய, போட்டு குழம்பாகக் காச்சி இதுக்குக் கற்கம் சுக்கு பலம் .௰, மிளகு பலம் களஞ்சு.௰, கிராம்பு பலம்.௰, சீரகம் பலம்.௯, இது எல்லாம் பொன் வறையாய் வறுத்துப் பொடி பன்னி முன்தின குழம்பில் தூவி பத்திலிறக்கி ஆறின பிற்பாடு உரிய தேன் விட்டு தின மூன்று பலங்

கொள்ள எந்தி, ஆருசிகம், விக்கல் குன்மம் தீரும்.

வேறு.

வில்லைப் பத்திரி பட்டை போக்கி இளைச்சது பலம்.யய, தண்ணீர்.த, சிற்றா மட்டி வேர் பலம்.யரு, முத்தக் காசு பலம்.௪, இந்த இரண்டு மருந்தும் தண்ணீரில் போட்டு குறுணியாகக் காய்ச்சி ஏலம்.பலம்.யகா, கடுக்காய், நெல்லி முள்ளி, தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள், கொத்தமல்லிகை இவை ஒரொன்று பலம்.௪, இதெல்லாம் பதக்கு தண்ணீரில் போட்டு நாழுளியாகக் காய்ச்சி இந்தஇரண்டு கஷாயமும் கூட்டி பழ வெல்லம் பலம்.யஉ, போட்டு குழம்பாகக் காய்ச்சி இந்தக் குழம்பில் நல்லெண்ணை தெ.,நெய்.தெ, சுற்கம், திரிபலை, திரிகடுகு, சன்ன லவுங்கப் பட்டை, சித்தரத்தை, அதிமதுரம், கோட்டம், சீரகம், அசமதாகம், பெருங்காயம், நாகப்பூ, முத்தக் காசு, தற்கோல மிளமிச்சம், கொத்தமல்லி, மஞ்சள், முந்திரிகைப் பழம் இவை ஒரொன்று மூன்று பலம் வறுத்து இடித்துப் பொடி பண்ணி லேகியத்தில் போட்டுக் கிளறி நாள் ஒன்றுக்கு மூன்று பலம் வறுத்து இடித்துப் பொடி பண்ணி லேகியத்தில் போட்டுக் கிளறி தின்ன இதுக்கு ஆருசிகம், வாந்தி, விக்கல், குன்மம் தீரும். வேறு மயிலுந் துணை.

சருவாவந்த வயிரவன்.

வெண்காரம் பலம்.௪,நாபி பலம்.௪, கெந்தகம் பலம்.௪, இரசம் பலம்.உ, சுக்கு பலம்.௪, மிளகு பலம்.௪, திப்பிலி பலம்.௪, சாதிலிங்கம்பலம்.யஉ, இதுவெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு இஞ்சிச் சாறு கொடுவேலிக் கஷாயச் சாறு இந்த மூன்று சாறு ஒரொன்றுக்கு இரண்டு சாமமாக மூன்று நாள் அரைக்கவும். உளுந்துப் பிரமாணம் குளிகை பண்ணி அநுப்பான மறிந்து இடவும். சர்வ சுரத்துக்குமாம்.

ராம பாணம்:

ரசம் பலம்.௪, நாபி பலம்.௪, கிராம்பு பலம்.௪, கெந்தகம் பலம்.௪ மிளகு பலம்.௪, சாதிக்காய் பலம் இது புளியாரைக் கஷாயத்தில் அரைத்து உளுந்துப் பிரமாண முண்டை பண்ணி சர்வ வியாதிக்கும் அநுப்பானமறிந்து இடவும்.

(வேறு) நடுக்கு காச்சலுக்கு.

ரசம் பலம்.௪, துரிசு பலம்.௪, வெண் காரம் பலம்.உ சுத்தம் பலம்.உ, வெள்ளைப் பாஷாணம் பலம்.உ, இவை மிதி பாகலிலை கையாந்த கரை இந்தச் சாற்றில் இரண்டு நாள் நாலு சாமம் அரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி மிளகு பொடியும் வெந்நீரிலும் கூட்டி இட இஞ்சிச் சாற்றிலிட பஞ்ச கோல கஷாயத்திலிட பொன் முஷ்ட்டி கஷாயத்திலிட இதுக்கு குடிநீர் நாறத்தையிலை, துளசியிலை, இலந்த யிலை, பேய்ப் புடோல் சிறு வழுதிலை, வேப்பம் பட்டை, சீந்தில் தண்டு, விஷ்ணு கிரந்தம், பேரா முட்டி வில்வப் பத்திரிவேர், சுக்கு, சீரகம், முடிஞ்சு போட்டு நாழுளி நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

நடுக்கக் காச்சலுக்கு குடிநீர்.

சிற்று முட்டி வேர். பேராமுட்டி வேர். ஆமணக்கம் வேர், சீந்தித் தண்டு, நொச்சிலை இலைக் கொழுந்து, சுக்கு, இவை கஷாயம்.

(வேறு) குளிகை.

வெள்ளுள்ளி, திப்பிலி, இஞ்சி, சீரகம், பெருங்காயம்இது வெல்லாம் சரி சமன் கொண்டு நாவல் பட்டைச் சாறுவார்த்தரைத்து குன்றிப் பிரமாண உருண்டை பண்ணி சுக்கு நீரிலிடவும்

(வேறு) பித்தத்துக்கு.

கையாந்த கரை எண்ணை, கையாந்தகரைச் சாறு இரு நாழி, நெல்லிக் காய்ச் சாறு இரு நாழி, எண்ணை நாழுளிஅதி மதுரம் நாழி எண்ணைக்கு யஉ. பலம் அரைத்து கரைத்து எண்ணையும் விட்டு பசுவின் பால் இரு நாழி விட்டு முன்னுள்ள சிறு கொதியிட்டு பதத்தில் வடித்

வடித்து தலையில் வார்க்கப் பித்தம் நாசமாம்.

## ஒருத் தலை வலிக்கு:-

ஆடா தோடைச் சாறு, தெ. அதில் வேர்ப் பட்டைச் சாறு.தெ, பசு மஞ்சள் சாறு.தெ, ஈருள்ளிச் சாறு.தெ, எலுமிச்சம் பழச் சாறு.தெ, உழக்கு வெள் வெங்காயம் வசம்பு கூட்டி மூன்று நாள் தலையில் வார்த்து கட்டவும். மூன்று நாள் நல்லெண்ணை வார்த் முழுகவும். இந்த மெழுகு வந்ததுக்கு முன்னே கடுகுப் புகை காட்டவும் தலை வலி நிற்கும்.

## (வேறு) மூக்கு நாற்றத்துக்கு.

மூன்று மிளகு மாதளை வேர். ஈருள்ளி தும்பைப் பூ, பச்சைக் கற்பூரம் இவை முலைப் பாலில் நறுக்கி நசியம் பண்ணத் தீரு.

மூக்கு நாற்றத்துக்கு:------தாமரைப் பூவை முலைப் பாலில் நசியம் பண்ண நாத்தம் மாறும்.

(வேறு) தேங்காய் நறுக்கி எண்ணெயில் நசியம் பண்ண மாறும்.

## நாசிகா பீடம்.

வாய் விளங்கம், சுக்கு, மிளகு, செவ்வியம், இந்துப்பு இவை ஒரொன்று அரைக் காசிடை பொடி பண்ணி கையாந்த கரைச் சாறு.தெ, நெய் உரி. ஈக இவை யெல்லாம் கூட்டி பதத்தில் வடித்து நசியம் பண்ண மாறும். வெப்புப் பாவை அலுவை நீராமைக்கு:-

சுக்கு, மிளகு, வெள் வெண்காயம், கடுகு, கல்லுப்பு, இந்துப்பு, நொச்சிக் கொழுந்து, அளிஞ்சிக் கொழுந்து இதில் வேப்பம் பட்டையும் இவை வெள்ளாட்டுக் கோமியம் வார்த் தரைத்து நாற்த் தம்பளத்தில் திரிச்சு ஒரு கலசத்திலிட்டு வெள்ளாட்டு கோமியம் வார்த்து எட்டு நாள் அரைத்து வைத்து எடுத்து முந்தக் கருப்புக் கட்டி தின்று பின்பு இரண்டு கார்சளவு தின்ன வெப்பு வாவை நீராமல் தீரும்.

## வெப்புப் பாவை மூலத்துக்கு.

சுக்கு, மிளகு, வெள் வெங்காயம், கடுகு, இந்துப்பு, நேர்வாளம் பருப்பு.ரு, காட்டு மல்லிகை வேர் சாறடை வேர், நாய் வேளை வேர், இவை ஒரொன்று எலுமிச்சங் காயளவு அரைத்து ஒரு கருங்கோழி கொண்டு வந்து காலுந் தலையும் அறுத்துப் போட்டு, குடல் வாங்கிப் போட்டு இந்த மருந்தெல்லாம் கோழி வயிற்றிலே வைத்து இரு நாழி வேப் பெண்ணை வார்த்து வேக வைத்து எடுத்து நாளொன்றுககு ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ள வயிற்றில் வலி மூலம் வெப்பு பாவை தீரும். ~~நீராமைக்கு~~*

## (வேறு) நீராமைக்கு.

புன் முருங்கைப் பட்டை பலம்.கய, இாடி வேலி வேர், மாவிலிங்கம் வேர், வறள்க் காரை வேர் நொச்சி வேர், சிவந்தை வேர் இவை ஒரொன்று பலம்உ, மிளக்கு பதக்கு தண்ணீர் வார்த்து நாழியாக காச்சி பிசைந்து பிழிந்து வடித்து இரு நாளி நெய் விட்டு இரு நாளி பால்விட்டு இதில் அரைத்துக் கரைக்கு மருந்து:- சாறடை வேர்; முக்கறத்தை வேர், கொடு வேலி வேர், விளவி வேர், வெண்காரம், வெள்ளுள்ளி, சுக்கு, மிளகு, பெருங்காயம், வசம்பு, இந்துப்பு, குடசப் பாலைப் பட்டை ஆக இவை மருந்து ஒரொன்று முக்களஞ்சு முதல் சொன்ன கஷாயம் வார்த்தரைத்து கரைத்து கள்ளிப் பால்.ய பலம் விட்டு பதத்திலே வடித்துத் தினம் ஒரு பலம் கொள்ளத் தீரும்.

## (வேறு) தேற்றும் விரைக் கற்பம்.

தேற்றும் விரை காடியிலரைத்து உடம்பில் பூச எவ் வியாதியும் போம். இதில் ~~காய~~ கிலை உலத்தி பொடி செய்து நறு நெய்யில் கொள்ள எல்லா குன்மமும், பெரு வயறும் கவுசையும் தீரும்.

## கவுசைக்கு, அருவைக்கு மருந்து.

தில்லைக் கள்ளிப் பால் கறந்து வந்து உரிய பாலுக்கு கல்லுப்பு உழக்குப் போட்டு வெள் வெங்காயம் ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்துப் போட்டுக் கிளறி ~~மெழுகு~~ செய்த

பிறகு நல்ல பின்னுக்கு ஆண்டு மாறின பின்னுக்குப் பொடி செய்து போட்டு மெழுகு பதத்தில் வைத்துக் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி :- அருவை கவுசை தீரும்.

அமுலக பயித்தியத்துக்கு . எப்போது நெல்லிக்காய்ச் சாறு புளிக்க எடுக்கிறதுக்கு:-

அமுலக பைத்தியத்துக்கு சுத்தி பண்ணின இரசம், பச்சை நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஊமத்தை விரை, கெந்தகம், தாம்ப பற்பம், ஏலம், இலவங்கம், கிராம்பு, இலவங்கப் பத்திரி சங்குப் பொடி வில்லேப் பழம், கச்சோலம் இதெல்லாம் சமன் பாகங் கொண்டு நாலு சாமம் கையாந்த கரைச் சாற்றிலரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி அமுலக பைத்தியத்திற்குத் தேனில் கொடுக்கவும். வாந்திக்கு, வயிறு கழிச்சலுக்கு, சத்தி குன்மத்துக்கு, வலி குன்மத்துக்கு இதுக்கெல்லாம் தேனில் கொடுக்கவும்.

சன்னி வாதத்துக்கு தன் வந்திரி இரசம்.

இர்சம், அப்பிரக செந்தூரம், பொன் லோகம், முத்து [illegible]. இவை [illegible], [illegible], மாஷிகம், வங்க பற்பம், சாதிலிங்கம், கெந்தகம் இது வெல்லாம் சமன் கொண்டு கொடு வேலிக் கஷாயத்தில் ஒரு சாமம் செருப்படிச் சாறு சாமம் அரைக்க கையாந்தகரைச் சாற்றில் ஒரு சாமம் பஞ்ச கோல கஷாயம் பன்னிரெண்டு சாம மரைத்து காசுக் குப்பியில் அடைத்து ஏழு சீலே மண் செய்து வாலுகா யெந்திரத்தில் வைத்து மூன்று சாம மெரியிட்ட பிற்பாடு எடுத்துக் கெண்டை மீன் பித்தில் அரைத்து உளுந்து பிரமானம் உண்டை பண்ணி அனுபானம் விசேஷமாய் சன்னி வாதத்துக்கு இடவும்.

(வேறு) பாண்டு ரோகத்துக்கு.

இரசம் அஞ்சு பலம், பொன்னரி தாரம் பலம்.ய, காரீய்யம் பதினொரு பலம், இது தனித் தனியே சுத்தி பண்ணிக் கொண்டு இரசமும் காரீய்யமும் உறவு செய்து கொண்டு இத்துடனே அரிதாரம் கூட்டிப் பவள மல்லிகையிலேச் சாறு வார்த்தரைத்துப் பேய்த்திப் பால் முந்த வார்த்தரைத்துச் சதிரக் கள்ளிப் பால் வார்த்தரைத்து எருக்கம் பல்ல் வார்த்தரைக்க செந்தாமரைப் பூச் சாறு வார்த்தரைக்க ஊசுக கொடிச் சாறு வார்த்தரைக்க இந்தச் சாறு ஆழாக்கு மாத்திரம் விட்டு தனியே அரைத்து மண் குகை பிடித்துக் குகைக்குள்ளே வைத்து மேலும் மூடிச் சீலே மண் செய்து ஒரு சட்டியில் மணலிட்டு மணலுக்குள்ளே வைத்து மேல்ச் சட்டி கொண்டு மூடிச் சீலே மண் செய்து நாலு சாமம் காடாக்கினியாகக் எரியிட்டு பின்மூடி எடுத்து தானிய புடத்தில் வைத்து இதுக்குத் தீரும் வியாதி குஷ்ட்ட ரோகம் பாண்டு ரோகம், சோகை வாய்வு, குளிர் காச்சல், சூதக வாய்வி, எந்த வியாதிக்கும் அரைக்கால் பணவிடை மாத்திரம் வெண்ணெயிலிட பிரமியம் சீய்ப் போலேவிழுகிறதுக்கு நூலு போலே விழுகிறதுக்கும் இதுகளெல்லாம் நிற்கும்.

சகல சுரத்துக்கும் அரிதார பற்பம். good

அரிதாரம் விராகனிடை பத்து, சங்கு விராகனிடை இருபது இது இரண்டும் நாயுருவி சமூலம் துவைத்துச் சாறு பிழிஞ்சு அந்தச் சாறு விட்டு அரைத்து நன்றாய் அரைத்து தாலச் சட்டியில் அடைக்கித் தட்டி வைத்து சட்டி கொண்டு சீலே மண் செய்து ஒரு பணவிடை இஞ்சிச் சாற்றில் எந்தச் சுரத்துக்கும் கொடுக்கவும்.

பாண்டு ரோகத்துக்கு.

தஞ்சாவூருக் கிட்டம் சுத்தி பண்ணிக் கொள்ளவும். மிளகு உழக்கு நாயுருவிப் பொடி உழக்கு, வெள் வெங்காயப் பொடி உழக்கு இந்த நாலு மருந்தும் தஞ்சாவூர்க் கிட்டம் பொடி செய்து அந்தப் பொடி உழக்கு இந்துப்பும் ஆறப் பொடி செய்து கொள்ளவும். குன்மங் கூடினால் பெருங்காயம் கூட்டிக் கொள்ளவும்.

பாஷாண சுத்தி.

இரசம், கெந்தகம், பொன்னரி தாரம், வெள்ளைப் பாஷாணம் கெவுரி பாஷாணம், துத்தம், துரிசு, வெண்காரம், மனோசிலே, பச்சை நாபி, அரப் பொடி செம்பரைப்

பொடி வெள்ளியம், காரீயம், பொன், வெள்ளி இதுகள் சுத்தி பண்ணுகிற வகை.
இரசம் சுத்தி பண்ணுகிற வகை:- அலிஞ்சப் பட்டைச் சாறு கொடு வேலி வேர்க் கஷாயம் கறுப்பு மத்தை இலைச் சாறு, கத்தாளஞ் சாறு இதுகளிலேமத்திச்சு, பின்பு எடுத்து சீலையிலிட்டு ஏழு தரம் பிளிஞ்சு கொள்ளவும். பிறகு சுக்கு, மிளகு, திப்பிலிபொடியில் மத்திக்க. கடுக்காய், நெல்லி முள்ளி, தான்றிக் காய் மத்திக்க. இதுகள் இரச சுத்தி வேறு.
கெந்தக சுத்தி பண்ணுகிற வகை:- சட்டியிலே பால் வார்த்து வேடு கட்டி கெந்தகம் பொடி செய்து மேலேவைத்து அது மேலே சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து பூமியில் குளி கெல்லிப் பாலிருக்கிற சட்டி மறைய மூடி அதின் மேலே நெருப்பிட்டெரியிடக் கெந்தக முருகிப் பாலிலே விழும். இது கெந்தக சுத்தி.

வேறு.

பொன்னி தாரம் சுத்தி பண்ணுகிற வகை:- பூசணிக்காய்ச் சாறு, சுண்ணாம்பு எருமை மோர் இதுகளிலே தோளேந்திரம் கட்டி எரியிடச் சுத்தி தானே.
வெள்ளைப் பாஷாண சுத்தி பண்ணுகிற வகை:- கல்ச் சுண்ணாம்பு கரைத்து அதிலே தோளேந்திரமாகக் கட்டி எரிடச் சுத்தி.
கெவுரி பாஷாணம் சுத்தி பண்ணுகிற வகை:- ஒரு பலம் கெவுரிபாஷாணம், எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து உருண்டை பண்ணிச் சுண்ணாம்பு கரைத்துத் தொளேந்திரமாகக் கட்டி எரியிடவும்.
துத்தம் சுத்திபண்ணுகிற வகை:- துத்தம் பொடியாக்கி நாய் மூத்திரத்தில் தோளேந்திரம், வேறு-துத்தம் சுத்தி பண்ணுகிற வகை துரிசியைத் தயிர் வார்த்தரைத்து அடை தட்டிச் சட்டிக்குள் வைத்து எரியிடத் தயிர்த் தண்ணீர் சுவறின பிற்பாடு எடுப்பது.
வெங்காரம் சுத்தி பண்ணுகிற வகை:- நெருப்பிலே பொரிச்சு கொள்ளவும்.
மனோசிலை சுத்தி:- மனோசிலை வெள்ளாட்டுக் கோமியத்தில் தோளேந்திரம்.
பச்சை நாபி சுத்தி பண்ணுகிற வகை:- கோ மூத்திரத்தில் இரண்டு சாமம் ஊறப் போடவும். (வேறு) அரப் பொடி, நல்லெண்ணெ கோமூத்திரம், புளிச்சக் காடி, புளிச்ச மோரில் இந்த வகை ஒன்றுக்கு ஒருக் கால் காய்ச்சிப் போடவும் சுத்தியாம்.
செம்பரைப் பொடி சுத்தி பண்ணுகிற வகை:- செம்பரைப் பொடி, புளியிலைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, கோ மூத்திரம் கொள்ளுச் சாறு, மோர் எருக்கம் பால் இதுகளிலே வறுத்துக் கொட்டச் சுத்தி.
(வேறு) வெள்ளியம், காரீயம் இந்த படி செம்பரைப் பொடி சுத்தி பண்ணின படி சுத்தி பண்ணிக் கொள்ளவும்.
பொன் சுத்தி பண்ணுகிற வகை:- பொன் தகடு தட்டிச் செம்மண் பொன்னில் பூசிச் சுடச் சுத்தி.
வெள்ளி சுத்தி பண்ணுகிற வகை:- வெள்ளி தயிரில் பாலில் காய்ச்சித் தோய்க்கச் சுத்தியாகும்.

## கோடா குளி.

நேர் வாளம் பலம்.உ, உடைத்து பருப் பெடுத்து புதுச் சட்டியில் போட்டுக் குளுந்த தண்ணீர் விட்டு எட்டு நாளூற வைத்து எடுத்து நஞ்செடுத்துப் போட்டு யிதுக்கு மருந்து. திப்பிலி கடுகுரோகணி, சாதிலிங்கம், கொட்டை முத்துப் பருப்பு, கத்தாளையிலுள்ச் சோறெடுத்து மூன்று நாளரைத்து சிறு தூசி வளங்கம்ப் பிரமாணம் குளிகை பண்ணி அநுபானத்தில் கொள்ளவும். சர்க்கரையில் கொள்ளவும். மூல சரீரக் காரருக்கு பிறண்டையும், மிளகு மரைத்து அதில்க் கொள்ளவும். மிஞ்சிலில் மோருஞ் சோறும் உண்ணவும்.

## தலைவலிக்கு எண்ணெய்.

நார்த்தம் பழச் சாறு, சாணக்கிச் சாறு, ஆகண்டையிலைச் சாறு, மஞ்சள் சாறு, சாணகச்

சாறு ஒவ்வொன்று நாழி விளக் கெண்ணை தெரு, கற்கம் அதித்தை, சதகுப்பை, மர மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கிராம்பு, சாதிக்காய், செவ்வியம், ஆயில்ப் பட்டை, பெரு மரப் பட்டை, திப்பிலி, வசம்பு, புதகரப்பன் இதெல்லாம் நாழிக் களஞ்சு கூட்டி அரைச்சுக் கரைச்சுப் பதத்தில் வடித்து தலையில் வார்க்கத் தலை வலி நிற்கும்.

1.11.62. செந்தூரம் போக்கு.

வெள்ளீயம் பத்துக் காசிடை, அரி தாரம் அஞ்சு காசிடை இந்த அரிதாரத்தை பால ரசம் பட்டைச் சாறு வார்த்தரைத்து வெள்ளீயத் தகடு பண்ணித் தகட்டில் அரைத்து மருந்தை கீழு மேலும் பூசிக் குகையிலிட்டு விறகு புடம் போடவும்.

நாக பற்பம் பண்ணுகிற வகை:- மஞ்சிலை எருக்கம் பாலி லரைத்து அந்த நாகத்தில் தடவி குகையிலிட்டு புடம் போடவும். பற்பமாம்.

செம்பு பற்பம் பண்ணுகிற வகை:- ஆட்டுப் பாலில் கெந்தகம் அரைத்து ஒரு பலம் கெந்தகத்துக்கு ஒரு பலம் செம்புத் தகடு தட்டி கீழு மேலும் பூசப் புடமிட பிற்பாடு எலுமிச்சம் பழச் சாற்றில் புடம் போட எருக்கம் பாலில் புடமிட.

வெள்ளி பற்பம் பண்ணுகிற வகை:- மாக்கூடும் கொண்டு வந்து கள்ளிப் பாலிலரைத்து வெள்ளித் தகட்டில் பூசிப் புடம் போடப் பற்பமாம்.

பொன் பற்பம் பண்ணுகிற வகை:- செம் மண்ணில் பொன் சுத்தி பண்ணித் தகடு தட்டி அந்தத் தகட்டில் கருப்பஞ் சாற்றிலே கெந்தக மரைத்து கீழு மேலும் பூசிப் புடம் போடவும் பற்பமாம்.

பூரணச் சந்திரோதையம் பண்ணுகிற வகை.

சொன்னிறம், வெள்ளிக் காந்தக் கல்லு காரீயம், தாம்பர பற்பம், சாதி லிங்கம், பச்சை நாபி, அப்பிரகம், முத்து, தங்கம் பவளம், கஸ்தூரி, குங்குமப் பூ, வெங்காரம் இரசம் இதெல்லாம் ஒவ்வொன்று களஞ்சு கெந்தக மிரு களஞ்சு இதெல்லாம் ஒரு மிக்கக் கலந்து குளிக்கல்லிலே போட்டு ஆலம் பால் விட்டு அரைத்துக் காசுக் குப்பியிலடைத்து இருபத்தொரு சாமம் வாலுகா யெந்திரத்லே எரியிட்டு இறக்கிக் கொண்டு பயித்தியத்துக்கு ஏலரிசி, சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி பொடி செய்து இஞ்சி சாற்றிலே கூட்டி அதிலே சற்று தேனும் சர்க்கரையுங் கூட்டி யிட பைத்திய வியாதி குணமாம்.

வாதத்துக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, வெள் வெங்காயச் சாறு, இஞ்சிச் சாறு, இதுகளிலிட, சன்னி வாதத்துக்கு இஞ்சிச் சாறு தேனிலிட பிரமியத்துக்கு வெண்ணெயிலிட இந்த படி அநுபானமறிந்து இடக் குணமாம்.

இரச செந்தூரம் பண்ணுகிற வகை.

இரசம் பலம்.க, கெந்தகம் பலம்.க, பொன்னரிதாரம் பலம்.க, வெண்காரம் பலம்.க, நவாச்சாரம் பலம்.சு, காரியம் பலம்.அ, இதுகளெல்லாம் ஒன்றாகக் கூட்டி கண்டங் கத்திரிச் சாற்றிலேயும் எருக்கம் பட்டைக் கஷாயத்திலேயும் வெள்ளை வெங்காயக் கஷாயத்திலேயும் கடுக்காய் நெல்லி முள்ளி தான்றிக் கரியக் கஷாயத் திலேயும், வெற்றிலைச் சாற்றிலேயும் ஆக இந்த சாற்றிலே அந்தப் பதினாறு பலத்தையும் தனித் தனியே அரைத்து காசிக் குப்பிலே அடைத்து பன்னிரண்டு சாமம் வாலுகா யெந்திரத் திலேஎரியிட்டு இறக்கிக் கொள்ளச் செந்தூரமாம். சன்னி வாதத்துக்கு இஞ்சிச் சாற்றி லிட.

இரச பூபதி பண்ணுகிற வகை.

இரசம் பலம்.க, கெந்தகம் பலம்.க, செம்பு பொடி பலம்.க, சுத்தி பண்ணிப் போட்டுக் கொள்ளவும். ஆக இந்த மூன்று பலமும் குழிக் கல்லிலே ஒரு மிக்க கூட்டி போட்டுக் கொண்டு செருப்படிச் சாற்றிலே பனிரெண்டு சாமம் சுத்தி நன்றாகப் பொடி ஆற்க மத்திக்க பிறகு காசிக் குப்பியிலே அடைத்து ஏழு சீலை மண் செய்து பன்னிரெண்டு சாமம் எரியிட எரியிடுகிற போது வாலுக யெந்திரத்திலே ஆரம்பத்திலே ஒரு சாமம்

எரியிட்டு மற்றப் பதினொரு சாமம் அத்தை பார்த்து அதிகமாக எரியிட்டு இறக்கிக் கொண்டு பூபதியை நிறுத்துக் கொண்டு மூன்று பலங் கண்டால் வசம்பு ஒரு பலங் கூட்டிக் கொண்டு ஆக நாபி கூடக் கண்ட பலத்துக்கு சரியே சுக்கு மிளகும் பொடி செய்து கூட்டிக் கொண்டு கொடு வேலிக் கஷாயம் காய்ச்சி அந்தக் கொடு வேலிக் கஷாயத்திலே ஒரு சாமம் மத்திச்சுக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணிக் காச்சலுக்குஞ் சன்னி வாதத்துக்கும் குன்மத்துக்கும் குளிர் காச்சலுக்கும் இருமலுக்கும் இஞ்சிச் சாற்றிலிட மற்ற வியாதிக் கெல்லாம் அநுபானமறிந்து யிட.

சவ்வு குட்டத்துக்கு சர்வ கடி விகாரத்துக்கு தயிலம்:- கெந்தகம் பத்து விராகனிடை, குண்டு மணிப் பருப்பு பத்து விராகனிடை, வேலிப் பருத்திச் சாறு வார்த்தரைத்து முத்தின தேங்காய்க் கொடுக்கையிலடைத்து மூன்று சீலை மண் செய்து செந்திரிக்கை பண்ணி வட்டிக்குள் வைத்து அந்தச் செந்திரிக்கை மேலே கொடுக்கையை வைத்தால் தயிலம் விழும். அநுபானம் வெள்ளைப் பூண்டு பருப்பில் தோய்த்து தின்னவும்.

## இரச பற்பம்.

ஆதண்டம் பழச் சாற்றில் இரண்டு விராகனிடை இரசம் விட்டு மூன்று நாளரைத்து குகைக்குள் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து பற்பமான வாறே எடுத்து இலைத்துக்குப் பத்துக் கொன்று கொடுக்கவும்.

## கடப்பம் விரைக் கற்பம்.

கடம்பம் விரை சூரணம் பண்ணி வெந்நீரில் குடிக்க கடி விகரம் போம் இதின் விரையை ஒன்றிரண்டா யிடித்துப் பானையிலிட்டு ஒரு கலசங் கொண்டு மூடிச் சீலை மண் செய்து பானை அடியில் துமரிட்டு குளிக்குள் கலசம் வைத்து அதின் மேலே பானையை வைத்து விருட்டி மேலே போட்டு எரியிட்டு தயிலம் இறக்கிக் கொள்ளவும். இந்தத் தயிலம் கடி விஷத்துக்கு கொடுக்கவும். இதின் பட்டை இதின் விரை ஆகாசக் கெருடன் கிழங்கு, சுக்கு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், இதுகள் சூரணம் பண்ணி வெருகடி பிரமாணம் எடுத்து வெற்றிலையில் வைத்து கெந்தகத் தயிலத்தில் ஒரு பணவிடை கடப்பந் தயிலத்தில் ஒரு பணவிடை இந்தச் சூரணத்தில் வைத்து எந்த கடிக்கும் கொடுக்கவும். பெரு வியாதிக்குங் கொடுக்கவும்.

## ஈளைக்கு நெய்.

பசுவின் வெண்ணை பலம் ஒன்று, சிற்று முட்டி வேர் பலம் இருபது, முத்தக் காசு பலம் இருபது இவை யிடித்து தண்ணீர் விட்டு நாலொன்றாகக் காய்ச்சி இளநீர் படி நாலு, பால் நாழி, நல்லெண்ணை நாழி, விட்டுச் சாதிக்காய், திரிகடுகு, தேத்தாங் கொட்டை, சதகுப்பை, நெய்தல்க் கிழங்கு, செங்கள நீர்க் கிழங்கு, அல்லிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு இவை ஒரொன்று நாற்களஞ்சு கூட்டி இளநீர் வார்த்தரைத்துக் கரைத்து முன் கடைந்த வெண்ணையும் மருந்தும் கஷாயத்தில் கரைத்து மூன்று நாள் சிறு கொதியிட்டு பதத்தில் வடித்து தலையிலும் தேய்த்து உடம்பிலும் பூச க்ஷயந் தீரும். செவ்விள நீர் பசுவின் பால் பூசணிக்காய்ச் சாறு, தண்ணீர் மிட்டான் கிழங்குச் சாறு, பொன்னாங் கணிச் சாறு, பேய்ப் வாழைக் கிழங்குச் சாறு, நெருஞ்சில் சீந்தில் ஒரிலைத் தாமரை நீர் முள்ளி ஆக இவை வகை ஒன்றுக்குச் சாறு நாழி பசுவின் நாருளி அமுர்த வள்ளிக் கிழங்கு நிலப் பனைக் கிழங்கு, அத்தித் திப்பிலி, நாயுருவி, வேர் பாலை வேர், ஏலம், காரெள்ளு, சீரகம், பென்னாங் காணி வேர், நீர்முள்ளி விரை, அதிமதுரம், கைச் சோலம், வெள்ளிரி விரை, பெருங் குரும்பை, பூனைக் காலி விரை, பூசணி விரை, தேத்தாங் கொட்டை, மூந்திரிகைப் பழம் இவை ஒரொன்று நாளிக்கு களஞ்சு கூட்டி அரைத்து கரைத்து பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

(வேறு)

சதா வாரிக் கிழங்கு, பசுவின் பால், கருப்பம் பால், வெள்ளரிக்காய்ச் சாறு, ஒரிலைத் தாமரைச் சாறு, கோவை யிலைச் சாறு, நெருஞ்சில்ச் சாறு, இளநீர், ஆக வகை ஒன்றுக்குச் சாறு இரு நாழி, நெய் நாழி விட்டு திரிகடுகு, கற்கடக சிங்கி, கிராம்பு, செவ்வள்ளிக், கொடி நெருஞ்சில், ஏலம், நன்னாரி வேர், யிச்சங் குருத்து

முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், சந்தன, பிலாமிச்சம் வேர், சர்க்கரை ஆக இவை ஒரொன்று நாளிக்கு களஞ்சு கூட்டி அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து உள்ளுக்கு கொடுக்கவும். தீரும் வியாதி:- உடம் பெரிச்சல், க்ஷயம், உள் வெக்கை இவை தீரும்.

<u>சுரத்துக்கு நாக செந்தூரம்.</u>

நாகம் பத்து விராகனிடை, குழிக் கல்லிட்டு இளந் தேங்காய்ப் பூடுச் சாறு விட்டு எட்டு நாள் அரைக்கவும். மெழுகு பதத்தில் பாசிப் பறு பிரமாணம் குளிகை பன்னி அநுபான விசேஷத்தில் கொடுக்கவும். எந்த சுரத்துக்கும் தேன், திப்பிலியில் கொடுக்கவும்.

<u>சிரங்குக்கு மருந்து.</u>

கைப் பூரம் மூன்று விராகனிடை, ஏலம் ஒரு விராகனிடை, பசுவின் வெண்ணெயிலரைத்து சிரங்குகளுக்கு பூசவும்.

<u>க்ஷயஇரசம்.</u>

நாகம் பத்து விராகனிடை உருக்கினதிலே இரசம் பத்து விராகனிடை விட்டுக் கொள்ளவும். வெள்ளைப் பாஷாணம் நா விராகனிடை, கெவுரி பாஷாணம் நாலு விராகனிடை இந்த மருந்து நாலும் செருப்படிச் சாறு நாலு நாள் தேள் கொடுக்கு பின் சாறு நாலு நாள் விட்டரைக்கவும். எட்டு நாளரைக்கவும். அரைத்த பின்பு கருப்பான வாறே மண் குகை பிடித்து அதுக்குள் மருந்து வைத்து மேலும் குகையில் மூடி இரண்டு சீலை மண் செய்து நல விரல் குளி கெல்லி விருட்டி அடுக்கிப் புடம் போடவும். உருகின வாறே எடுத்துக் கொண்டு பிரமியமென்னப் பட்டதுக்கு ஆவாரம் பூ வரிசி ஏலம், சீரகம் பசுவின் வெண்ணெயிலரைத்து மருந்து அரைப் பணவிடை போட்டுக் கொடுக்கவும். சுக்கு, திப்பிலி, மிளகு, வெதுப்பிக் கொண்டு ஆறக் பொடி செய்து மருந்து அரைப் பணவிடை தேனில் குழைத்து வாத மென்னப் பட்டதுக் கெல்லாம் அநுபான விசேஷத்தில் கொடுக்கவும்.

<u>சலக் கழிச்சலுக்குத் தயிலம்.</u>

நல்லெண்ணை படி.கரு, அத்திப் பட்டை பலம்.ய, ஆலாம் பட்டை பலம்.ய, இச்சில் பட்டை பலம்.ய, ஓதியம் பட்டை பலம்.ய, மருதம் பட்டை பலம்.ய, கருங்காலிப் பட்டை பலம்.ய, ஆவாரம் பட்டை பலம்.ய, சிற்று மட்டி வேர் பலம்.ய, நன்னாரி வேர்பலம்.ய, கோரைக் கிழங்கு பலம்.ரு, பற்படாகம் பலம்.ரு, விஷ்ணு கிரந்தி பலம்.ரு, ஒருகங் கிழங்கு பலம், வாழைக் கிழங்கு, இலந்தையிலை, துளசி யிலை, நாற்தையிலை, தயிர் தண்ணீர் படி.உ, தண்ணி மிட்டான் கிழங்கு பலம்.ய, காடித் தண்ணீர் படிஉ, வாழைக் கிழங்குத் தண்ணீர் படி.உ, ஒருகங் கிழங்கு காடி வாத்து வேகிறது படி தண்ணீர்.உ, சீந்தில் கொடி பலம்.யரு, சன்ன லவுங்கப் பட்டை பலம்.ரு, சந்தனக் கட்டை.பலம்.ரு, அகில்கட்டை பலம்.ரு, இலவங்கப் பட்டை பலம்.ரு, அமுக்கிரு வேர் பலம்.ரு, செங்கழு நீர்க் கோஷ்டம் பலம்.ரு, அதிமதுரம் பலம்.ரு சிறு நாகப் பூ பலம்.க ஏலம் பலம்.ரு, கிராம்பு பலம்.ரு, செண்பகப் பூ பலம்.ரு, கொம்பரக்கு பலம்.ரு, தேத்தாங் கொட்டை பலம்.ய, குங்குமப் பூ விராகனிடை க., கஸ்தூரி பணவிடை.க, இந்தப் பட்டை வகை யெல்லாம் வகை ஒன்று பதக்கு தண்ணீர் விட்டு பதினாறு நாள் ஊறப் போட்டு பதினாறன்றைக்கு வகை ஒன்றக்கு பதக்குத் தண்ணீரும் இரு நாழி , இரு நாழியாக காய்ச்சி தாளியில் விடவும். சளியாத படிக்கு அக்கினிப் பிடமக இருக்கவும். சித்த மட்டி வேர், நன்னாரி வேர், பற்படாகம் கோரைக் கிழங்கு, விஷ்ணு கிரந்தி, இதுவும் பதக்கு பதக்கு தண்ணீர் விட்டு இரு நாழி இரு நாழியாகக் காய்ச்சி வெவ்வேறு காய்ச்சி முன் கஷாயத்துடனே விடவும். வெருகன் கிழங்கு நூறு பலம் ஆறு மாத்தைக் காடி பதக்கு தண்ணீர் விட்டு இரு நாழியாகக் காய்ச்சி முன் கஷாயத்தோடே விடவும். வாழைக் கிழங்கைக் குழியாகத் தோண்டி அதின் ஊறின தண்ணீர் இரு நாழி அந்தக் கஷாயத்தில் விடவும்.

இளநீர் இரு நாழி அந்தக் கஷாயத்தில்

இலந்தையிலே, துளசியிலே நாற்றை யிலே வகை யொன்றுக்கு பதக்கு தண்ணீர் விட்டு இரு நாழி நாழியாகக் காய்ச்சி முன் கஷாயத்தில் விடவும். நல்ல தயிர் வடி கட்டின தண்ணீர் இரு நாழி முன் கஷாயத்துடன் விடவும். தண்ணீர் விட்டான் கிழங்கு துவைச்சு இரு நாழி விட்டுக் கொள்ளவும். சீந்தில் தண்டு மேல் புறணி வாங்கிப் போட்டுத் துவைச்சுப் பதக்குத் தண்ணீர் விட்டு இரு நாழியாகக் காய்ச்சி கஷாயத்தோடே விடவும். மலாக்காய் சந்தனக் கட்டை அகில் கட்டை இலவங்கப் பட்டை அமுக்கிறா வேர், செங்கழு நீர்க் கிழங்கும், அதி மதுரம் வகை ஒன்றுக்கு பலம்.ரு, இதுவும் வகை வகையாய் யிடித்து பத பதக்குத் தண்ணீர் விட்டு இரு நாழி இரு நாழியாகக் காய்ச்சி முன் கஷாயத்தோடே விடவும். கொம்பரக்கு பலம்.ரு, சன்ன லவங்கப் பட்டை பலம்.ரு, வகை ஒன்றுக்கு பத பதக்கு தண்ணீர் விட்டு இரு நாழி இரு நாழியாகக் காய்ச்சி முன் கஷாயத்துடனே விடவும். தேத்தாங் கொட்டை பலம்.ய, செண்பகப் பூ பலம்.ரு, இதுவும் தனித் தனியே யிடித்து பத பதக்கு தண்ணீர் விட்டு இரு நாழியாகக் காய்ச்சி முன் கஷாயத்தில் இடவும். கிஷாயமெல்லாம் காய்ச்சிக் குறுகி வருகிற பக்குவத்தில் எண்ணை இரு நாழி இடவும். சிறு நாகப்பூ பலம்.க, ஏலம்.ரு, கிராம்பு பலம்.ரு, இது மூன்றும் அரைத்து கரைத்து எண்ணெயில் விடவும். மெழுகு பதத்தில் வடிக்கவும். எண்ணை வடிச்சவுடனே குங்குமப் பூவும் கஸ்தூரியும் எண்ணையில் போடவும். தானிய புடத்தில் வைக்கவும். இதுக்குத் தீரும் வியாதி சலக் கழிச்சலுக்கு உள்ளு அரைக் கரண்டி உள்ளுக்கு கொடுக்கவும். மேலும் பூசவும். புண்ணெனப் பட்டதுக் கெல்லாம் போடவும். புரைகளுக்கும் போடவும்.

## நீரடைப்புக்கு மருந்து.

ஏலம்.பக, மஞ்சள் பலம்.க, கற்பூரசிலாசித்து பலம்.க, வெண் காரம் பலம்.க, இந்த மருந்து நாலு மிடித்து காரீய்யம் பலம்.க உருக்கி ஈசல் இறகு போலே தட்டி எள்ளுப் போலே வெட்டி இந்த இடித்த மருந்தும் ஈயமும் கலந்து இருபது பொட்டணமாகக் கட்டி கீழே உமி பரப்பி அதின் மேலே எருமுட்டை அடுக்கி அதின் மேலே கோணிப் பட்டு போட்டு அந்த பொட்டணம் அது மேலே வைத்து கோணி பட்டுக் கொண்டு மூடி எருமுட்டை கொண்டு அடுக்கித் தனல் போட்டு வெந்தவாறே எடுத்துக் கொண்டு குளிக் கல்லில் அரைச்சு வைத்துக் கொண்டு அநுபானம் நெருஞ்சில் கஷாயம் பசுவின் பாலிலே போட்டு வேக வைத்து அந்தப் பாலிலே போட்டு மூன்று பணவிடை மருந்து போட்டு கொடுக்கவும்.

## வங்க பற்பம்.

தலே ஒடு இடித்துப் பொடியாக்கி காரீய்யம் பலம்.ய, சட்டியில் போட்டு உருகி வரச்சே இந்தப் பொடியைப் போட்டு வறுக்கவும் பற்பமாம். ~~இந்த இருந்து~~ இருமலுக்குத் தேத்தாங் கொட்டைப் பாக்களவு இந்த வங்க பற்பம் மூன்று பணவிடை போட்டுக் கொடுக்கவும்.

~~ஸோ மயிலுத் தூளே.~~

## சுழல் புழு வெட்டுக்கு.

சுழல் புழு வெட்டின் குணம் சொல்லக் கேளீர். சிரத்தினில் புள்ளி போல் தினவெழும் உரோம மற்று அழுற்றியாய் கபால மெங்கும் குற்றியே மூளை வற்றி குன்றி போல் புடைத்த போதே கொங்கொடி எட்டி ஆகு விழிவி வேர் உடை வேல் வாகை முட்டை யிரு பாசி புங்கு முன்னை மா மலையின் வேரை தட்டியே நருக்கித் தண்ணீர் தன்னில் கஷாய மிட்டு வெட்டிடு மருந்து தன்னை மீளவும் வெந்தது மேற் பிறையோகங் கேள் மீன் காட்டினிலே குமைப் பால் காரெள்ளையும் வாட்டிய அரத்தையும் வடியிவற் காரமும் தீட்டிய கார்பு கார திரிகடுகு, சலமும் கூட்டியே அரைத்து வெந்து கொதித்திடக் குணமதாமே.

மண்டையின் மேலெனவாய் மயிர் கனத்து மதந வடித்து கண்டித் கழலே போல் கரகரத்து
திரம் பாயுமப்போ

சுண்டை வேர் துளசி கரண்றை துடரி செங்கத் தாரி பாகு மிண்டிய புன் முருங்கை விழிவி
வேர் மரு தோன்றியின் பூறல்

கண்டியின் வெண்ணை கார கார புகார வாலுமுலை தீண்டிடு மச மோதகம் சிறந்த பூத

மோடரத்தை மக்கில் இவை யரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து தலையில் வார்க்க கடியின் விடம் கழன்றிடும் நீர் செயமே.

## கன்ன விப்புருத்திக்கு.

தாண்டிய கன்ன விப்புருதியின் குணம் செல்லக் கேள்மின்
நீண்டிய வாளுக் குள்ளே ஏழுந்து நல்லி ரத்தம் வற்றி
தண்டியே யுடைத்துத் தோன்றில் சார்ந்துடன் அமுக்கிரு வேர்
பாண்டியின் தாரி வித்தும் பழு பாகற் கிழங்குங் கூட்டி
மூண்டெழப் பூசுமாகில் முகிளித்து உடைக்கும் கானே.

உடைத்த பின் திராய் அவுரி வெள்ளறுகு தும்பை செம்முள்ளி பங்கம் பாளையும் அரசின் வேரும் குறித் கச்சோலம் கோட்டம் கொரக்கின் முதியார் கூந்தல் கர வேர் கரிசியும் காளற தோர் மரீசம் சாந்தம் உருகிய வேப்பம் எண்ணை அதில் பெய்து ஒசித்து புண்ணில் ஆடையில்தடவிப் போட்டன் பொடித்தது ஊர்ந்து வற்றிப் புரையோடு உலர்ந்து போமே.

கனத்துதோ கன்னத்துக்குள்ளே ககளை நம் படுக்க காது முடித் தலை வலிக்கும் சற்றே முண்டிடும் திரட்சியாகும். பிடத்ததோர்பிடறி கன்னம் பிரண்டிடும் நவிக் கீளே. முடித்திடும் செவிய தென்று முறைமையால் பேசிக் கொள்ளே. நாறிய வசம்பு உள்ளி நல்ல பொன்னரி தாரத்தின் ஒரிய முத்தக் கசுடன் அரத்தைஇரசம் அப்பிரகம் தேவதாளியும் குடசப் பாலை திரிகடுகுடனே. கூட்டி ஆட்டிய நல்லெண்ணை அரசந் தோல் பிராயின் வேரும் கூடவே வெந்து குற்ற குலைந்திடும் செவிடு தானே.

மண்டைக்குள்ளே சந்ததம் உச்சி தன்னில் தழல் வெரி கொளுத்தி பந்தம் மின்னடியெக் கண்ணும் வாயும் வெதும்பியே புடைத்துத் தோன்றில் கொந்தியே. பசளை நெல்லி குழுந்த தோர் கூட்டம் வெண்ணை பொங்கிய காடிச் சோறும் புளி நறளைக் கிழங்குடே சேர்த்து தங்கவே அழைத்து வைத்தால் தணிந்திடும் உடைந்து போமே.

உள்ளறச் சீயும் கொண்டு ஒடுங்கியே ஒருவும் பாய்ந்தால் சிந்திய நல்லெண்ணை திருக் கொன்றை வெம்பாடல வெந்தயம் கார் அரிசி, கோட்டம், வசம்பு, கல்மதம், சந்தனம், நெல்லிக்காய், தான்றியோ டேலங் கூட்டி வெந்திடில் விப்புருதி வெளுண்டிடும், கிரந்தி உடம்பு வற்றிலும் திரி போகம் மிகுந்தாலும் பித்த ஓமத்த அதிசெயலுலங் கழிச் சல் லொட்டிக் கழிஞ்சு உடல் மடுக்கத்ததலும் அதிகார உறக்கத் தாலும் சலிப்பிலும் மன மிடியிலும், உறக்கத்தாலும் விக்கல் எடுக்கும். இதுக்கு பூமி சர்க்கரை பதின் பலம் துவைத்து இடித்து நாலு மரக்கால் தண்ணீர் விட்டு குறுணியக்க் காய்ச்சி வடித்து இதில் சிற்ற மூட்டி அமுத வள்ளி, நீர் முள்ளி, தாமரை வளையம், பூசணிப் பழச் சாறு, நாழி கருப்பஞ் சாறு நாழி முசுமுசுக்கைச் சாறு.ச, விளம் பழம்.ஙய, மூந்திரிகைப் பழம் பலம்.ய, பேரீத்தம் பழம் பலம்.ய, மாதளம் பழச் சாறு.ச; குளவிந்தச் சாறு:உ, தமரத்தம் பழச் சாறுரு, கிடாரர எலுமிச்சம் பழச் சாறு.ருஉ, புளிச்சக் கொடிச் சாறு, வெள்ளரிக் காய்ச் சாறு, ச, வெள்ளரி வேர். பலம்.எ; அதிமதுரம், செண்பகப் பூ, ஏலம், அக்கர காரம், திப்பிலி, கிராம்பு, மசீம், இந்துப்பு, நற்சீரகம், அன்ன வேதி, மாங்கிஷ வேதி, யங்கிஷார்ரம், ஒரொன்று ஙஃ பலம்.ய, காராம் பசுவின் பால் ரு, புண்டரீகத் தின் பாலாழக்கு விலாளத்தின் பாலுழக்கு, மெரிப் பால்.உ,. காமொருவின் பால் .ங, காராம் பசுவின் நெய்.ங, இம் மருந்துகள் அரைத்து கரைத்து பதத்தில்வடித்து உள்ளே கொள்ள விக்கல் சத்தி காசரோகம், எலிகடி, காயா சுவாதம், குடகறை, மூச்சு உழைவு தீரும்.

## இரத பற்பம்.

இரசம் சுத்தி பண்ண அந்தரத் தாமரைச் சாறு. சாமத்துக்கு குறுணி பிழிஞ்சு வைத்து ஆவாரங் கரியாகுதல், காசாங் கரி யாகுதல், சுட்டு வைத்துக் கொண்டு ஒரு அகலெடுத்து அதிலே ஐம்பது விராகனிடை இரசம் அந்த அகலில் வார்த்து கொல்லன் உலை போலே உலை மூக்கு வைத்து அதிலே அந்த் கரி போட்டு அதிலே அகல் வைத்து இ

அதிலே இரதம் விட்டு அந்தச் சாறு சுவறச் சுவற வார்த்து துருத்தி கொண்டு ஊதி வரவும். சாமத்துக்கு இரு நாழி சாருக சாமத்துக்கும் சாறு சுவறவே வேக வைக்கவும். இப்படி யஉ, சாமமும் வேக வைக்கவும். இந்த இரத எடுத்து வைக்கவும். இந்த இரதம் குழிக் கல்லில் வார்த்து செருப்படிச் சாற்றால் ஒரு சாமம் மத்திக்கவும். உடனே வைத்து சற்றே உலந்த வாறே பொன் மத மத்தைச் சாருகுதல் செங்கழுநீர் மத மத்தம் பூச் சாறு ஆகுதல் வார்த்து ஒரு சாமம் மத்திச்சு அரைக்கவும். அதவும் சற்று உலந்த பின்பு பொய்த் தலை, கையாந்த கரைச் சாறு, வார்த்து ஒரு சாமம் மத்திச்சு சற்றே உத்த பின்பு மணத்தக்காளிச் சாறு வார்த்து ரைத்து ஒரு சாமம் அரைக்கவும். அதை எடுத்து உருண்டையாக உருட்டி கொடி வேலி, வேர்ப் பட்டை நன்றுகக் சாந்து போலே அரைச்சுக் குகை பண்ணி வாய் மூடாமல் சுற்றி பண்ணின இரதம் விட்டு வைக்கவும். கல்ப்பு இடித்து சட்டியிலிட்டு உப்பு சட்டியிலே போடுவதுக்கு முன்னே அவுரி வேரும் சாறனை வேரும் நறுக்கி அடிச் சட்டியிலே போட்டு அதின் மேலே இரத குகை வைத்து சட்டி கொண்டு மூடி மேல் சட்டி மூடும் போது ஊமத்தை யிலை சட்டிக்குள் தடவி மூடி சீலை மண் செய்யவும் அரைப் பொடி கடுக்காய் வெல்லம் மூன்றும் அரைத்து சீலை மண் செய்து நிலத்திலே அடுப்பு வெட்டி கூட்டி சுற்றும் சுவர் வைத்து அடுப் பில் சட்டியை வைத்து நலு சாமம் கமலாக்கினியாக எரிக்கவும். மற்ற நாள் எடுத்து பற்பம் வாங்கிப் பறணியில் வைக்கவும். இது இரத பற்பம்.

## இரத கற்பூரமாகப் பண்ணும் வகை.

வெள்ளைக் காக்கணம் வேர் இடித்து வெள்ளை வெற்றிலைச் சாறும் அந்தப் பட்டையில் வார்த்து ஒரு சாமம் ஊற விட்டு ஊறின பின்பு வெள்ளிய சீலையிலிட்டு பிழிஞ்சு அந்தச் சாறு வார்த்து முன்னுள்ள இரத பற்பம் இந்த சாறு வார்த்து நாலு சாமம் அரைக்கவும். அரைத்ததை உருண்டையாக உருட்டி பீங்கான் குப்பிலிட்டு அந்த வாய்க்கும் பீங்கானோடு வைத்து வாய் மூடி அரைப் பொடி வெல்லம் கடுக்காய் இவை அரைத்துக் குப்பி வாய் மட்டும் சீலைமண் செய்து பீங்கானெங்கும் சீலை மண் செய்து புத்து மண் களி மண் செம்மண், உமி தண்ணீர், வார்த்தரைத்து ஒன்பது சீலை மண் செய்து உலர உலர சீலை மண் செய்து வண்ணான் வெள்ளாவி போலே அடுப்புக் கூட்டி அந்தப் பீங்கானுக்குள்ளே வெள்ளைக் காக்கணம் வேர் போட்டு பிறகு பதக்கு பிடிக்கிற பானை கொண்டு வந்து அதிலேசூத்து மணல் குறுணி போட்டு நடுவே குப்பி வைத்து மேலேயும் குறுணி போட்டு நடுவே வாய்க்கு ஓடுரைத்துப் போட்டு சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து .ச, சாமம் கமலாக்கினி.ச, சாமம் காலாக்கினி.ச, சாமம் காடாக்கினியாக.யஉ, சாமமும் எரிக்கவும். சாமமும் ஆறப் போட்வும். இந்த மருந்து எடுக்கும் போது வைரவ பூசை பண்ணி எடுக்கவும்.

## இரச கற்பூர செந்தூரம்.

இரச கற்பூரமும், நெல்லிக் காய்க் கெந்தகமும் சரி கூட்டி முன்னரைத்த மருந்து வெள்ளைக் கார்க்கம் சாறு வார்த்தரைத்து காசுக்குப்பிலிட்டு அந்த ஒன்பது சீலை மண் செய்து பானையில் மணல் முன் போட்டாப் போலே இட்டு சீலை மண் செய்து பன்னிரெண்டு சாமமும் வேக வைக்கவும். செந்தூரமாம்.

## கற்பூரம் முன் வைத்தபடி ஏழு தரம் வைத்தால் தங்கமாம்.

இந்தஇரத கற்பூரம் இடுகிற அநுபானம் ஒட்டிய புண்ணுக்கு பாக்களவு வாழைப் பழத்தில் கால் பணவிடை இரச கற்பூரம் கழஞ்சு இருபது நாள் கொடுக்க. கபால சூலைக்கு வாழைப் பழத்தில் கால் பண விடை பத்து நாள் கொள்ள. காசு செவிட்டுக்கு பாக்களவு வெண்ணெயில் கால் பணவிடை பத்து நாள் கொடுக்கவும். தாப சுரத்துக்கு ஆமாவகு இஞ்சி சற்றில் கால் பணவிடை ஆறு நாள் கொடுக்கவும். கல்ரிப்புக்கு பாக்களவு சர்க்கரையில் கால் பணவிடை பத்து நாள் கொடுக்கவும். பழம் புண்ணுக்கு இரச கற்பூரம் புண்ணின் மேலே தூவி வெற்றிலை வாட்டி எட்டு நாள் போட்டுக் கட்டவும். சூடல் வாதத்துக்கு ஆமணக்கு முற்றிலே நாலு முற்றுப் பொடி செய்து கால் பணவிடை மூன்று வருஉத்திய வெல்லத்தில் மூடி ஆறு நாள் கொடுக்கவும்.

வாத மானதுக் கெல்லாம் பாக்களவு வாழைப் பதுத்துக்குள்ளே கால் பணவிடை உய, நாள் கொடுக்கவும்.

பிரமியத்துக்கு ஆறு கிராம்பு பொடி செய்து பாக்களவு சர்க்கரையில் கலந்து கால் பணவிடை கற்பூரம் பத்து நாள் கொடுக்கவும்.

மூல வியாதிக்கு திப்பிலி மூன்று கொம்பு பொடி செய்து ஒரு காசத்தினை தேன் குத்தி அந்தப் பொடியைக் குழைத்து கற்பூரம் கால்ப் பணவிடை கூட்டு பத்து நாள் கொடுக்கவும்.

காமாலைக்கு ஒரு சிறு கரண்டி கை ஓமத்தை அரைத்து ஆழாக்கு இள வெந்நீரில் கரைத்து கால் பணவிடை கூட்டி பத்து நாள் குடிக்கவும்.

வயிறு கழிச்சலுக்கு:- சாதிக்காய் பாதியும் சமுத்திரா சோகி விரை ஒன்றும், இரண்டையும் பொடி செய்து மூன்று வருஷத்திய வெல்லத்தில் குழைத்து கால் பண விடை கலந்து ஆறு நாள் கொடுக்கவும்.

குமர கண்டறுக்கு இறையளவு சுக்கும் எட்டு மிளகும், திப்பிலியும், பொடி செய்து இரண்டு காசத்தனை தேனில் குழைத்துக் கால் பணவிடை கலந்து ஒரு *பணவிடை* ஒரு மண்டலம் கொடுக்கவும்.

பாம்பு விஷத்துக்கு ய. மிளகு பொடி செய்து பாகலிலைச் சாற்றிலே குழைத்து கால் பணவிடை கலந்து கொடுக்கவும். விரைய தம்பினைக்கு சாதி ப் பத்திரி பதிதிரி அரை காசிடை பொடி செய்து ஒரு கரண்டிகை பசுவின் நெய்யில் கால் பணவிடை கலந்து உள்ளே கொள்ளவும். தம்பிக்கும் பக்க சூலைக்கு உழக்கு இள வெந்நீரில் ஒரு குன்றியத்தனை பெருங்காயம் கரைத்து கால் பணவிடை கலந்து இரண்டு பொழுதுக்கு கொடுக்கவும்.

கண்ட மாலைப் புண்ணுக்கு கோட்டம் கால்; 1காசிடை பொடி செய்து ஒரு காசத்தனை தேனில் குழைத்து கால் பணவிடை பத்து நாள் கொடுக்கவும்.

பாண்டு வியாதிக்கு மூங்கிலுக்குள்ளே இருக்கிற கற்பூரம் ஒரு காசசத்தனை சர்க்கரையிலே கால் பணவிடை பத் நாள் கொடுக்கவும்.

பெரு வயிற்றுக்கு கையாந்த கரை பாக்களவு அரைத்து ஒரு காசத்தனை ஆமண கெண்ணையில் கந்து கால் பணவிடை கற்பூரமும் கந்து நாள் கொடுக்கவும்.

காச ரோகத்துக்கு மூன்ற வருஷத்திய வெல்லத்திலே கால் பணவிடை கூட்டி ஒரு மண்டலம் கொடுக்கவும். வயிற்றில் வியதிக்கு

வயிற்றில் வியாதிக்கு மூன்று வருஷத்திய வெல்லத்திலே ஒரு பாக்கத்தனை கூட்டிக் கால் பணவிடை கலந்து உய. நள் கெருக்கவும்.

மந்தார காசத்துக்கு பாக்களவு பழ வெல்லத்தில் கால் பணவிடை கலந்து பத்து நாள் கொடுக்க.

சுவாச காசத்துக்கு பாக்களவு பழ வெல்லத்தில் கால் பணவிடை கலந்து ஒரு மண்டலம் கொடுக்கவும்.

சன்னி தோஷத்துக்கு இறையத்தனை சுக்கும் பத்து மிளகும் பொடி செய்து கால் பணவிடை கலந்து நாலு பொழுது கொடுக்கவும்.

எரி குன்மத்துக்கு மூன்று வருஷத்திய வெல்லம் ஒரு பாக்களவு கால் பணவிடை கலந்து உய. நாள் கெருக்கவும்.

சொறி குஷ்ட்டத்துக்கு பேரரத்தை யிறையத்தனை பொடி செய்து கரிசலாங் கண்ணி சாற்றில் கசத்தனை கூட்டி கால் பணவிடை கலந்து ஒரு மண்டலங் கொடுக்கவும்.

வெள்ளை குட்டத்துக்கு:-காசத்தனை நல்லெண்ணையில் உள்ளங் கையில்குத்தி கால் பணவிடை கூட்டி ஒரு மண்டலங் கொடுக்கவும்.

செவ்ட்டை கடிக்கு:- பேரரத்தை இறையத்தனை எடுத்து கோட்டம் ஒரு பாக்கத்தனை கிராம்பு அஞ்சாறு இதுகள் கூட்டி பொடி செய்து இரண்டு காசத்தனை தேனில் குழப்பி ஆறு நாள் கொடுக்கவும்.

திரி தோஷத்துக்கு:- தேனுந் திப்பிலியுங் கூட்டிக் கால் பணவிடை கூட்டி மூன்று நாள் கொடுக்கவும்.

சன்னி வாதத்துக்கு இஞ்சிச் சாற்றில் கால் பணவிடை கொடுக்கவும். அல்லது சுக்கரைத்து இளவெந்நீரில் க்கரைத்து 4 நாள் கொடுக்கவும்.

சிலேட்டும சுரத்துக்கு:-

சிலேட்டும சுரத்துக்கு:- பத்து மிளகு பொடியும் பாக்களவில் பழ வெல்லமும் கால் பணவிடை கலந்து உ. நாள் கொடுக்கவும்.

பைத்தியத்திற்கு பாக்களவு சர்க்கரையில் கால் பணவிடை கலந்து ய. நாள் கொடுக்கவும்.

நீரிழவுக்கு சர்க்கரையில் கால் பணவிடை கலந்து உய. நாள் கொடுக்கவும்.

சன்னிக்கு இறையத்தனை சுக்கும். பதினஞ்சு மிளகும் பொடி செய்து கால் பணவிடை கலந்து இரண்டு மூன்று பொழுது நாவில் போடவும்.

தலுவாதத்துக்கு: இறைய்த்தனை சுக்கும் பதினஞ்சு மிளகும் பொடி செய்து கால் பணவிடை கலந்து ஆறு நாள் கொடுக்கவும். கீரைத் தண்ணில் நெஞ்சுகம்பிறதுக்கும் பாக்களவு வெல்லத்தில் கால் பணவிடை கலந்து நாஉ நாள் கொடுக்கவும்.

சிறு கோட்டா குழியுண்டை.

திரிகடுகுல் மலை நாவி சருவி நெரு விஷம் கெந்தகம், வெண்காரம், அக்கிரம், அரிதாரம், இரசம் பாளம் காசிடை திரிகடுகு, பங்கி.உ, நின்றதெல்லாம் சம பாகம் கருசலாங் சாற்றில் ஏழு நாள் அரைத்து பயறளவு உண்டை செய்து அநுபான வழியியிலே யிடவும்.

வன்மத்துக்கு ஓமம் பொரி பொரிச்சுப் பொடி செய்து போட்டுக் கொடுக்கவும்.

செரியாமலுக்கு ஓமம் கல்லுப்பு கூட்டி ஒரு குளிகை கொடுக்கவும்.

புண்ணுக்கு புகை: புகைக்கு மருந்து:

இரதம் பலம்.௯, ஈயம் பலம்.ங, தொட்டி பலம்.க, அரிதாரம் பலம்.க, தூரிசு பலம்.க, காந்தம் பலம்.உ, மனோசிலை பலம்.க, நாவி பலம்.ரு, கெந்தகம் பலம்.க, மூனி ம மஞ்சள் பலம்.உ, உப்பு உழக்கு, கெவுரி பலம்.க, இலைக் கள்ளிச் சருகு. பலகம்.க, எருக்கங் கரிபலம்.ரு, எட்டிப் பட்டைப் பொடி பாக்களவு சேரப் பொடி செய்து பெரிய கரண்டிகை யாக எடுத்து அதிலே முந்த உப்பு போட்டு பிறகு மஞ்சள் பொடி போடடு பிறகு எல்லாப் பொடியும் போட்டு அதிலே சற்றே குழித்து அதிலே இரதம் விட்டு யீம் உருக்கி இரத்தத் திலே விட்டு பிறகு உழக்கு ஆமணக் கெண்ணை கரண்டியிலே விட்டு கரண்டியை நெருப்பிலே வைத்து சற்றே பெங்கி கிளம்புகிறப் போலே சற்றே கிளம்பும். இரண்டு, மூன்று தரம் கிளம்பும். பின் எண்ணை சுவறக் கிளறிக் கொடுத்து இறக்கி ஆறு உருண்டையாக பிரித்து அதுக்குள்ளே இருந்த இரதம் ஈ கட்டி புளியஞ் சிராய்த் தணலில் புகைக்கவும். கார்ப்பு, புளிப்பு, பாகல்க் காய் உப்பு, தயிர், மோர் வேணுமென்றதை வார்த்து தின்று புகைக்கவும். நீர்ச் சோறுமாம். புகை எரு கடைசி ஆன பின்பு விளக் கெண்ணை வார்த்து மூழ்கி அந்தி சந்தி குளுந்த தண்ணீரிலிருக்கவும். புண் ஆழமாகில் இந்தப் படி புகைக்கவும். புண் கொஞ்சமாகில் இதில் பாதி புகைக்கவும். உட்டம் எடுத்தாலும் குளுந்த தண்ணீரிலிருக்கவும். நீர்ச் சோறு குடிக்கவும். வேலு மயிலுந் துணை.

நவறை குணம்.

நாக்குத் தடிக்கும். குரும்பிக்கு வீங்கும். தின வரிருக்கு மதுக்கு ஆமை நெயில் கிராம்பு காரம் கருஞ் சீரகம் காசுக் கட்டி கம்பிப் பிசின் அரத்தை கச்சோலம், வாலுழுவை அரிதி இவை ஒரொன்று இரு பலம் அரைத்து கரைத்து பதத்தில் வடித்து நாக்கிலிட விளிம்பு புறத்தே தேய்க்கவும். நாவறை தீரும்.

நாவில் தடித்தல்.

நாக்கைத் தடித்து இரத்தம் பொசியும் வங்கடியாய் விழும். வாய் நாறும். இதுக்கு நல்லெண்ணை நாழி, நற் சீரகம் குடசப் பாலை கண்டில் வெண்ணை வசம்பு, கருஞ் சீரகம், தேவதாரம் மாசக்காய் ஒரொன்று ங பலம் அரைத்து கரைத்து பதத்தில் வடித்து நாக் கிலிட்டு தேய்க்கவும். நாவில் தடித்தல்தீரும். வேலு மயிலும் துணை.

விப்புருதி கிரந்தி பிளவை புண்ணுக்கு எண்ணெய்.

பெரு மருந்து வேர், மிளகறணை வேர், பொன் முசுட்டை வேர், சிறு கருக்காய் வேர், இலைக் குட்டி குருந்தம் வேர். ஆற்றை விளாத்தி வேர் ஆதண்டை வேர் குண்டு மணி வேர், வெம்பாட வேர், நன்னாரி வேர், செங்காட்டம் வேர்; முத்தக் காசு, உள்ளி, வசம்பு,

இவை கூட்டி எண்ணெயில் பண்ணி எரித்திட எந்தப் புண்ணும் பிளவையும் ஆறும். சிறங்கை மிளகு கூட்டிக் கொதிக்க வைக்கவும்.

## வறச்சி காய சுவாத நெய்.

ஏலம், இலவங்கம், அதி மதூரம், கோட்டம், செண்பகப் பூ, சாதிக்காய், சாத்திர வேதி, வசுவசி, கொற்ற மல்லி, பற்படாகம், நாகப் பூ, இரு வேலித் தண்டு, கச்சோலம், முந்திரிகைப் பழம், திப்பிலி, வட்டத்துத்தி வேர், பொன்னுங் கணி வேர், சீதேவி வேர், சிற்றாமட்டி வேர், பேராமுட்டி வேர், செவ்வல்லி வேர், நெய்தல் கிழங்கு, தாமரை வளையம், கற்புற வள்ளி, அமுர்த வள்ளிக் கிழங்கு, நீர் வள்ளிக் கிழங்கு, நீர்ப் பூலாங் கிழங்கு, நீர்வள்ளிக் கிழங்கு, நீர் பூலாங் கொழுந்து இவை கூட்டி மருந்தெல்லாம் கஷாயமாக்கி ஊற வைத்து வடித்து நாழுழி குறுணி நெய் விட்டு வறுத்து வ வடித்து நக்க தலையிலும் உடம்பிலும் பூச, காய சுவாதம் நிற்கும்.

## கண்ணுக்கு தீராவினை தீர்த்தலுண்டை.

சுத்தம் துத்தி அஞ்சக் கல்லு, கடல் நுரை, பீத ரோகணி, சங்கு, சுண்ணும்புக் கல்லு, கடல் நுரை; பீத ரோசணி, சுண்ணும்புக் கல்லு, தலை ஓடு; ஆமை ஓோடு, கலைங் கொம்பு, சந்தனம், பளிங்கு முத்து; மனோசிலை, ஈயம். இரதம் வெங்காரம், வேப்பம் பிசின் கருவேலம் பிசின், ஓரிலைத் தாமரை வேர், கொன்றை வேர், செம்பு பொடி, அரைப் பொடி பச்சைக் கற்பூரம், குதிரைப் பல்லு கழுதைப் பல்லு, வெட் பூலா வேர், குன்றி வேர், கோரக்கர் மூலி வேர், முட்டையோடு ஏரல் கிளிஞ்சிலோடு வெள்ளைக் காக்கணம் வேர், கரு வேலம் வித், சிறு கீரை வேர் இவை ஒரொன்று பல .க, கொண்டு எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உருண்டை செய்து வைத்து இட வேதினை, பறம ரோகம், அனம் கோபம், நீர்ப் பாச்சல் இவை எல்லாந் தீரும்.

நாவில் வாதத்துக்கு:- உள்ளிச் சாறு உரி, எருமைத் தடங் கொடிச் சாறு உரி இவை இரண்டு கஷாயம் ஏறட்டு உரிய எண்ணை புகட்டி எரித்து வடித்துப் பூச நெகிழும்.

குன்மத்துக்கு:- இரதம் பலம், கெந்தகம் பல. , செம்பு பலம்.க, பெட்டியு மூடியுமாகச் சமைத்து இந்த எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து செம்புக் குள்ளே மூடி உப்பில் வைத்து மேலும் உப்பிட்டு பானையை கச்சட்டியாலே கவிழ்த்து மூடி சீலை மண் செய்து எருவில் மூட்ட மிட்டு எடுத்து பொடி செய்து ஒருமா பற்பமும் ஒரு வெற்றிலையும், நாலு மிளகும் கூட்டித் தின்ன பிறகு சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், அரைத்துக் குடிக்கவும்.

## குன்மம் இரத்த பிரமியத்துக்கு.

நாற்த்தங்காய் தோல், நாழி சங்கு சுண்ணம்பு, மிளகு, உள்ளி பீர உள்ளி, இரு பலம் சுக்கு .உ, பன் ஆனைப் பனைங் காய் சுட்டு நாழி இவை கூட்டி தேங்காய் துருவி சேர்த்து கருப்புக் கட்டியும் சேர்த்து தின்னவும். இரத்த பிரமியத்துக்கு தேற்று விரை இரு நாழி நீரில் நனைய வைத்து உழக்காகக் காய்ச்சிக் குடிக்க பிறமிய மாறும்.

சூலத்துக்கு:- இரதம் பலம். , நாபி பலம். , மிளகு பலம் , வாலுளுவை திப்பிலி, வெண்காரம், நேர்வாளம், பெருங்காயம், கெந்தகம், இந்துப்பு, செம்பு பற்பம் ஒரொன்று பலம்.ச காட்டுக் கறணைக் கிழங்குச் சாறு வர்த்தரைத்து செம்பு வட்டியில்ப் பூசி சட்டியில் கவிழ்த்து மண்ணுமிட்டு ஆறின லெடுத்து வேர்க் கொம்புச் சாறு வார்த்தரைத்து உளுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி சுக்குத் தண்ணீரிலிடவும். சிறு பிள்ளைகளுக்கு தேனிலிடவும். பெரு வயற்றுக்கு கையாந்தகரைச் சாற்றிலிடவும். சன்னிக்கு தேனிலிடவும்.

## நாற்த்தம் பழ நெய்.

இண்டங் கொழுந்து, உள்ளி வசம்பு, நார்த்தம் பழச் சாறு, வெள்ளாட்டுப் பால், உவர் மண் கரைச்ச தண்ணீர் 4 , இந்துப்பு அசமதாகம், பெருங்காயம், சவுக்காரம், துவற்சிகை, சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, சிறு மூலகம், செவ்வியம், தேவ தாரம் நாழிக்கு பலம்.க, அரைத்து கரைத்து வடித்து நக்க இருமல், ஈளை, உள் மாந்ல

கசம், சத்தி வன்மம் தீரும்.

<u>விடபாகத்துக்கு வீக்கத்துக்கு.</u>

நல்லெண்ணை கள்ளிச் சாறு எருக்கிலைச் சாறு, முருங்கை வேர், நாற்த்தங்காயளவு உள்ளி வசம்பு கற்கடகம் ஒரு பலம் பெருங்காயம் .க காசிடை அரைத்துக் கரைத்து வடித்து நக்க மேலும் பூசு வீக்கம் விடும்.

<u>கடிகைச் சிலந்திக்கு</u>:- என்னை பிறப்படுகிற வேளை பார்த்து நல்ல என்ணை நாழி எடுத்து அதிலே வெள்ளைக் காக்கணம் வேர் வடக்கே போற வேர் சீவி இரண்டு சிரங்கை வெள்ளுள்ளி இரண்டு சிறங்கை வசம்புத் தேறு, விரல் நீளத்திலே அஞ்சாறு எடுத்து பஞ்சு போலே தட்டி என்ணையில் கொதிக்க வைத்து கடுகு மோரு மொருத்த பக்குவத்திலே இறக்கி கடுகு இரண்டு மூன்று போது அந்த சந்தி தின்று மூன்று நாள் தின்று மூன்று நள் என்ணையும் அந்தி சந்தி குடித்து கடிகையிலும் என்ணையிடவும்.

<u>இரத்த விப்புருதிக்கு:</u>

இலைக் கள்ளி வேர், எலுமிச்சங் காயளவு அரைத்தை சதகுப்பை குங்கிலியம் ஓரொன்று ஒரு காசிடை மணித்தக்காளி, குப்பை மேனிச் சாறு வார்த்தரைத்து நல்லெண்ணை நாழியில் போட்டு பதத்தில் வடித்து தினம் நாலு தாசிடை நக்கி வரவும்.

<u>சீத சுரம் சுரத்துக்கு விரோசனம்.</u>

மடல் துத்தம், கெவுரி சரி ஊமத்தை யிலைச் சாறு வார்த்தரைத்து குன்றியளவு ஒரு உருண்டை சர்க்கரை ஆட்டுப் பால் இஞ்சிச் சாறு பசுவின் பால் வெண்ணெ பெற்ற தொன்றில் கொடுக்கவும். பத்தியம் பாசிப் பயறும், அரிசியும் போட்டு கஞ்சி காய்ச்சி கொடுக்கவும்.

சுரத்துக்கு:- கெவுரி, பலம்தி.க, மதுரம் பலம்,க, சாதிலிங்கம் பலம்உ, துரிசு பலம். 1/2, பொன் மத மத்தைச் சாறு வார்த்தரைத்து சிறு பயறளவு உருண்டை ஒரு உருண்டை பசுவின் தயிர் விடவும். சுரவுண்டை அரிதாரம் வெண்காரம், மலைசிலை கெவுரி இவை சரி பொன் மதமத்தைச் சாறு வார்த்தரைத்து பயறவு உருண்டை யிஞ்சியிலிடவும்.

<u>குளிர் வெதுப்புக்கும் நாலு நாளை மறலுக்கும்.</u>

கெவுரி, பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு ஒக்க அரைத்து குன்றியளவு உருண்டை செய்து குளிர் வெதுப்புக்கு பாலில் ஒரு உருண்டையிமவும். ஒருக்கல் இருக்கால் வாயிலெடுக்கும். வயிறு கழியும். பத்தியம் பாலுஞ் சோறும் ஆகும். விரோசனம், சுக்கு பலம்.ரு, மிளகு ஆழாக்கு, கடுகு ஆழாக்கு, ஓமம் ஆழாக்கு, வெண்காரம் பலம்,க பெருங்காயம் பலம்,க, வெள்ளுள்ளிப் பூடு.ய, நேர்வாளம் கொட்டை.ருய, சாறணை வேர் அஞ்சாறு கூட்டிச் சாறணைச் சாறு வார்த்தரைத்து தூதுவிளங்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி சுக்கு, மிளகு, கடுக்காய், உள்ளி கூட்டி அரைத்து இள வெந்நீரில் உண்டை கரைத்து கொடுக்கவும் கழியும். மோருஞ் சோறுங் கொடுக்கவும். வேலு மயிலுந் துணை.

<u>மூலத்துக்கு.</u>

கருங் கோழி யிறைச்சி கடுகு ஒரு சிறங்கை மிளகு அரைப் படி சீரகம் அரைப்படி வெள் வெங்காயம் கொடி வேலி வேர், எலுமிச்சங் காயளவு வட்டத் தெரிப்பு எலுமிச்சங் காயளவு; சுக்கு அசமதாகம் இவை யெல்லாம் கருங் கோழி இறைச்சியில் நிமிர்ந்து ஒரு படி என்ணையில் வேக வைத்து தினம் கடாயமும் கொண்டு இறச்சியும் தின்னவும். எட்டு நாள் பாக்கு வெற்றிலை விடவும்.

<u>புரைக் கழலைக்கு.</u>

வெள் வேல மரத்தில் புரைக் கழிலையும் உவர் மண்ணும் கூட்டி அரைத்து எட்டு நாள்ப் பூசவும். கழலை மாறும்.

தாம்பிராதி உருண்டை.

சூதத் திரட்டி, காரீயம், சிறியதுத்த மதற்கிரட்டி, சாதிச் சங்கமதற் சிரட்டி தங்கத்திரட்டி, தாம்பிரம், ஏதிட்டரைப் போ மென்றுதே எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து ஓதிச் சொன்னேம். கண்ணேய்கள் ஒன்றும் நில்லாதோடிடுமே. கண்ணேவு சங்கு பளிங்கம் விளர் வெள்ளிக் காக்கணம் வேர் மூத்தம் துரிசி சாறடை வேலந் துளிர் இவை சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து உருண்டை பண்ணி முலைப் பாலில் இட. சர்வ மூலத்துக்கு கரைய உள் மூலம் பிற மூலம் குதம் நீர் செறுத்தல் வாயு இரத்த மூலம் சீய் மூலம் எல்லாத்துக்கும் செங்கொட்டை .ள, .கைய்யாந்த கரைச் சாற் றில் முறித்து ஒக்கப் போட்டு இடித்து நன்றாக உறவு சேர யிடித்து எருமை நெய் உரி, ஒரு சட்டியில் வார்த்து அதிலே இடிச்ச மருந்தைப் போட்டு அடுப்பிலே வைத்து நேரம் பட வெந்தால் வெல்லம் கட்டி படும் இறகி விடும். இறகாத படிக்கு பதமாக இளகி நிற்கத்தக்கதாகப் பதமாகப் பண்ணி வைத்து விடி வேறு தினம் ஒரு பாக்களவு தின்னவும். நெய்யிலே போடுவதுக்கு முன்னே இடிச்ச மருந்தைத் தின்று பார்த்தால் நெஞ்சு கரகரத் திருந்தால் பின்னேயும் சற்று கய்யாந்த கரைப் பொடி இடித்துக் கொண்டு பிறகு நெய் யிலே போட்டுப் பதம் பண்ணி வைத்துத்தின்று வரவும். இப்படி .உய, நாள் தின்னவும். பால், நெய், கோழி யிறைச்சி, கீரை, முருங்கைக் காய் இவையாம். கடுந் தீயாக எரியாமல் சற்று நேரம் வெந்தால் போலே இறக்கி விடவும்.

செங்குட்டம் கருங் குட்டத்துக்கு.

காரெள்ளெண்ணே .ங, செங் கொட்டை இட்டு இரித்துப் பால் சன்ன சாலைக் கடுகு உழக்கு, கய்யாந்த கரை ஒரு பத்தம் கொடு வேலி வேர் ஒரு நாறத்தங் காய ளவு பால் வாத்தரைத்து எண்ணேயுடன் கூட்டி நாலு நாள் எரித்து வடித்து நக்கவும். பூசவும் இது கை கண்டது. ~~வேலு வி மயிலும் முன~~

புதி மூன்று சன்னிக்கு.

அவரி, சிறு கீரை, பெரு மருந்து, கோழிய் வரை நொச்சில், உத்தம தாளி, மணத்தக்காளி, குதிரை வாலி, துளசி, முடக் கொற்றான் நத்தைச் சூரி, சீதேவியார் செங்கழுநீர், செம்முள்ளி, குன்றிச் சாறணே, சத்தி சாறண்ட புங்கு, வேப்பந் தோல் சிறு புள்ளடி, கம்பின், திராய் விழி, கொடுவேலி, நன்னூரி, சிற்றமல்லி, வட்டத் துத்தி, திராம் இசங்கு, சிற்ற மட்டி, குப்பை மேனி, வேளை பேயதிதி, கண்டங் கத்திரி முதியாங் கட்நதல், கச்சோலம், முசுற்று முட்டை தாயைக் கொன்றான் மஞ்சள், கருங் குங்கிலியம், மிளகு, கம்பி பிசின் ஒரொன்று பலம்.க, அஞ்சென்னியும் கூட்டி அரைத்துக் கரைத்து வடித்துக் கொள்ளவும்.

கல்லு விழ:- பெருங்காயம் மஞ்சிட்டி, வெண் காரம், பொடி செய்து இட்டு மடிக்க கல்லு விழும்.

புருஷனை வேண்டாதவளுக்கு:-

மணத் தக்காளி கசக்சி மஞ்சள் விழுதோடே அரைத்து அந்த மஞ்சளிலே சாறு பிழிஞ்சு பூசிக் குளிச்சு, புருஷன் அண்டையிலே படுக்க பெண்டாட்டி வேண்டாதிருந் தால் இந்தச் சாறு சந்தனத்துடனே குழைத்து புருஷன் மேலே பூசிப் பெண்டாட்டி அருகே படுக்கவும்.

வசியம்:- வெள்ளெருக்கம் வேர், மயிரோசினை, ~~விசுன~~ கிராந்தி, கோரோசினை, குங்குமம் இவை கூட்டி அரைத்து உருண்டை பண்ணி வைத்துத் திலதமிடவும்.

இரத்தஜுதி புண்டை:-

வேண்டுந் துத்தம், துரிசு, நெல்லி முள்ளியும் வெகுவதான கடுக்காய், கற்பூரமும், காண்டமான சிறு கீரை, பொன்னாங் காணி வேர், தலையோடு, புளியம் பூ, வண்டும் பூலாவின் வேர், தலையோடு புளியம் பூ, பொன்னிரும்பு, நல் வெள்ளி, தாம்பிரம்,

வெண்கலம், மீடுகின்ற கொந்தாழம் விரையும் மேலிடமதான அடப்பம் விரையும் மெய்ப் பதான தேற்றான் விரையும் மிஞ்சுந்த மூலிசெவ்வல்லிக் கிழங்கு தான் தப்பில்லா தொரு காஞ்சிரத்தின் விரை தரித்த தான்றியின் காயம் கிழம் விரை, ஒப்பிலா தொரு திப்பிலி, சங்குடன் உகமையா மரிதாரம் யீரகொடே வய்ப்பதான அதிமதுரம், அகில் வாய்த்த புங்கம் விரைகள் மஜேசிலே, இலகு நந்தி பாவட்டத்தின் விறு பூ இடமதான கடல் நுரை, இந்துப்பு, குலவுகின்ற கனுவாய், மர மஞ்சள், சூறகமாம் வெள்ளைக் காக்கணம் வேர், நலமதான சீனக் காரம், சாறணை நல்ல வேர், கீழா நெல்லி வேர், நன்மையாம் குலவுகின்ற குறிஞ்சா வேருடன் மிகு குதிரைப் பல்லுக் குளம்பு ஆனைப் பல்லு கழுதைப் பல்லு, குளம்பு நேர் ஆவின் பல்லுக்குழம்பு நாயிற பல்லு தான் மான முதலையின் பல்லுமாம். சத்தியான முசலில் எலும்புமதே. கானமான கவுமாரி எலும்பு கடிய பன்றியின் பல்லு வெண் கல்லுமே மேனியாம் எலும்பின் எல்லு வெண் கல்லுமே மேனியாம் எலும்பிச்சம் விரை பல வெள்ளி லோத்திரம் மேவு பலகரை தானமான வரப் பூலா வேர் கய்யில் தரித்த கருவாளை முரிசலும், சலமதாம் முட்டையோடும், சம்பு நேர்தங்க மா முனி மஞ்சள்ள தன்டை வேர், குலமதாகிய மாணிக்கம், நற் செங்கள் கூறுகின்ற முத்து வயிரமும் இலகு பற்றிய வைடூரியம், கோமதேகம், புருஷ ராகம், இனியதோர் பலமாகிய நீலம் பவளம், நேர் புஷ்பராகம், இவையெல்லாம் சேரவே கழைஞ்சில் முலைப் பால் முள்ளிச் சேர்ந்த சாறு எலுமிச்சம் பழந் தன்னில் ஊறுகின்ற குளச் சாறு குட்டிப் பனையு கந்த மட்டையின் சாறு வரையினில் சாரமாகியசாறுடன் மாதளைத் தழைத்த நெருஞ்சிலச் சாறு, முருங்கையில் கூறமாகிய சாற்றினில் சந்தனம் கூட்டி ஆமணக்க முத்து கூடவே இவைகளெல்லாம் பல பல கொண்ட சாற்றினை வாத்தே அரைத்து மீறவே உண்டை கூட்டியே கூறுகின்ற குள்ளாறு தொன்றூறுடன் தொகுத்த கண்ணில் வியாதி தூலையவே ஆறவே பிரத்திஷதி யீரண்டையை அரிய கண்ணிலிட வினை யாறுமே.

## மூல வாய்வுக்கு.

வெள்ளாட்டுக் கோமியம் உழக்கு, பசுவின் கோமியம் உழக்கு, சதுரகள்ளிப் பால் உழக்கு, காட்டுப் பாகல்க் கிழங்கு உழக்கு, கடுகுழக்கு, கல்லுப்புழக்கு இவை பொடி செய்து கூடப் போட்டு பிறசி கெட்டிச்சு பகல் மாறு வெய்யிலிலே வைக்கவும். பத்து நாளைக்கு மேல் இத்தனையும் ஒரு சட்டியில் வசீர்த்து இரண்டு நாற்த்தம் பழம் வலையமாக அறுத்துக் கீறி ஒக்கப் போட்டு ஒரு முத்தின தேங்காய் கீறிக் கூட யிட்டு மிளகு உழக்கு கடுகு உழக்கு, கல்லுப்பு, உழக்கு பொடி செய்து கூட யிடவும்.

## பிள்ளைப் பெற்றவளுக்கு நஞ்சு விழாதிருந்தால் மருந்து.

புளியிலை உருவி வந்து அரைத்து பிழிஞ்சு நாழி போத வடித்து சட்டி காய வைத்து நல்லெண்ணை குத்தி உள்ளி நெரித்து இந்த சாற்றில் மிளகு சுக்கு முனி மஞ்சள் திப்பைப் பூ, பிண்ணாக்கு, டெக்கயில் சுட்டு இவை ஒக்கக் கொண்டு எலுமிச்சங் காயளவு அரைத்து தாளிச் சட்டியி சேர்த்தி பாகெழ காய்ச்சிக் குடிக்க நஞ்சு விழும். முட்டைச் சாம்பல் இள வெந்நீரில் கரைத்து தெளி வைத்து நாழி போதக் குடிக்கவும். வீழியிலையும், திராயும் புழுக்கிப் பிழிஞ்சு இந்தச் சாற்றிலே சுக்கு, மிளகு, கடுகு, அரைத்து கரைத்துக் காய்ச்சி நாழி போதக் குடிக்க நஞ்சு விழும். இரத்த கட்டும் விழும்.

## எலிக் கடிக்கு.

உப்பு பொடி செய்து கடி வாயில் கட்ட மாறும்.

மாட்டுக்கு விஷந் தீண்டினால்: தும்பையிலையும், குப்பை மேனி யிலையும் நெய்க்கொட்டான் பழம், உப்பு, மிளகு வசம்பு, பெருங்காயம், இசங்கிலை இதுவும் நறுக்கி நசியம் பண்ணவும்.

## மனிதற்கு ஆம்பிள்ளை விலகினால்.

பாச் சொற்றியிலை கசக்கிச் சாறு கொண்டு எண்ணையும் வார்த்துக் குடிக்கப் பிள்ளை விழும். வெட்டருமல் வெள்ளெருக்கம் வேர், திருகு கள்ளி வேர், சிறு கீரை வேர், வெக்காவளை வேர், இவ்வ குளிசமாடி வெட்டவும். வெட்டருமை பூச்சு வெட்ட காவேளை வேர் வெள்ளெருக்கம் வேர், வெள்ளைக் காக்கணம் வேர், முத்தெருத்தன் செவி வேர், வெள்ளாட்டு முத்திரத்திலரைத்து மேலேபூசி வெட்டவே வெட்டருகி. இது சோதிக்க வேண்டினால்

பூசணிக்காயில் தடவி வெட்ட வெட்டறுத. இது கை கண்டது.

பிள்ளை அழிக்க.

நன்னாரி வேரை அரையில் கட்ட விழும்.

கைய் வெள்ளைக்கு:- நல்லெண்ணை உழக்கு சிறுக வத்த தயிலம் போலே சுண்ட வத்தக் காச்சிச் சிறுகின பின் அந்த எண்ணையிலே போட்டுக் குழப்பி வைத்து பலம்.ங, இரதம் வாங்கி தினம் தினம் அரைக் கழஞ்சு இரதம் கையில் வார்த்து எண்ணை தயிலம் வார்த்து தேய்த்துக் கொள்ளவும். இப்படி ஆறு நாள் தேய்க்கவும். பிறகு விள்க் கெண்ணை வார்த்து இரண்டு முழுக்கு முழுகின் பின்பு நிருப்பை பிடிக்கவும்.

நிருப்பையாவது:- அரசம் பட்டை, அத்திப் பட்டை, நாவல் பட்டை, மாம்பட்டை, கொடி வேலி வேர், உவர் மண், சுண்ணும்பு, ஊமத்தையிலைச் சாறு.ச, துரிசு ஒக்கக் கரைத்துக் காய்ச்சி இதை வேது இருபது நாள் காட்டவும். கை நனைக்கவும். நாலு முறை ஐந்து முறை புதுக்க புதுக்க பட்டை வெட்டி வந்து வேது பிடிக்கவும். அவசியம் வெளுப்பு கறுப்புமாம். கை கண்டது.

புண்ணுக்கு என்னெய்:- வேப்பெண்ணை நாழியில், கார்த்திகைக் கிழங்கு அரைத்து எண்ணையில் போட்டு பண்ணி புண்ணில் போடவும். கடிகைச் சிந்திக்கு:- பிறப்பட்ட பக்க பற்றில் அடப்பங் கொட்டை அரைத்து கள்ளிப் பாலில் குழைத்து காதிலையில் பூசவும். இப்படி மூன்று நாள் பூசவும்.

குன்மப் பொடி:- இரதம், கெந்தகம் பொடி நாவி கொடுவேலி வேர், பச்சிலை விழால், சிவதை வேர், முத்தக் காசு, ஏலம், திப்பிலிமூலம், நாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, பாளம், செப்புப் பொடி, இவை ஒரொன்று க. பலம் பொடியாக்கி இவை யிற்றினிரும் கூரும் நற் கருப்புக் கட்டி கூட்டி பிசறி வைத்து வெருகடி தின்ன உதரத்திலுள்ள வியாதி தீரும்.

வயிற்றிலுள்ள வியாதிக்கு:-

சாறணை சமூலம் பலம்.ங, சிவதை வேர் பலம்.ங, கொடு வேலி வேர் இலைக் கள்ளி வேர் நில வா மணக்கு வேர், கண்டங் கத்திரி வேர், நொச்சில் வேர் இவை தன்னி லொக்க ஒரு பலங் கொண்டு சேர இடித்து குறுணி நாழி தண்ணீர் வார்த்து முன்னாழியான வாறே பிழிந்து எடுத்துப் போட்டு வடித்து உள்ளி ஆறு பலம் சோமலுபி பலம்.ற, இந்துப்ப பலம்.ற, மிளகு, செவிடு, கடுகு, பலம்.க, சுக்கு பலம்.க, இவை அரைத்துக் கரைத்து சிற்று மணக் கெண்ணை வார்த்து கூழி பதத்தில் வடித்து இரண்டு காசிடை கொள்ளவும்.

எரி பிள்ளைக்கு என்ணை முறை:- நறுந்தாளி பலம், பொன்னாங் காணி வேர், வரிக் கற்றாழை வேர் மதரம், கோட்டம், செண்பகம் ஒரொன்று பலம்.ங, கருங் குங்கிலியம் துவரசிகை அதிவிடையம் யவக்கூஷாயம் ஒரொன்று பலம்.ங, இவை அரைத்து கரைத்து நாழி எண்ணையில் போட்டு வடித்து புண்ணில் போடவும்.

முள் பிளவைக்கு என்னெய்: காரப, கருஞ் சீரகம், அரத்தை, அக்கார யவக்கூஷாயம் திப்பிலி, கிராம்பு, புங்கம் வேர், சிறு காஞ் சொறி வேர், நத்தைச் சூரி வேர், அவுரி வேர் இவை ஒரொன்று பலம்.க, கடை மருந்து ஒரொன்று பலம்.ங, அரைத்து கரைத்து வடித்துப் புண்ணில் போடவும்.

கற் பிளவைக்கு:- சிற்றாமணக் கெண்ணையில் துத்தம் துரிசு, சவுக்காரம், சாபுங, யவக் கூஷாரம், துவரசிகை, தகரம் திரிபலை, யழுங் கிட்டம் இவை ஒரொன்று பலம்.ரு, அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து புண்ணிலிடவும்.

சோகைக்கு நாரத்தங் கடுகு:-

நாலஞ்சு நாறத்தம் பழம் கொண்டு வந்து சிறுக வளையமாக அறுத்து சாறு போகாமல் கொண்டு அந்தப் பழமும் சாறும் குறுணி கொள்ளுகிற கலயத்திலே போட்டு தண்ணீர் படாத் எருமைப் ப்பால் ஒன்றரை மரக்கால் பால் காய்ச்சி உறைக் குத்திக் கடைந்து வெண்ணை எடுத்துப் போட்டு குறுணி மோர் தண்ணீர் விடாமல் பழம் இருக்கிற

பாண்டத்தில் ஊற்றி பழம் இருப்பு முறிசாலாக அஞ்சாறு இருப்ப போட்டு நன்றாக வேடு கட்டு மண் குழச் சுவராய் செம்மி எருப்பை வெட்டி அனலாய் கிளம்பின விடத்தில் புதைத்து முடி பத்து நாள் பனிரெண்டு நாள் சென்ற பிறகு எடுத்தால் ஊறியிருக்கும். திறந்து இரும் பெடுத்து போட்டு இந்த மோரை இறுத்த இரண்டு மூன்று நேரம் குடிக்க பின்பு கீற்றுத் தின்ன கீற்றாகத் தின்னவிட்டால் அரைத்து உண்டையாக உருட்டி எலுமிச்சங் காயளவு தின்ன காய்சில் வழியந் தணியும் ~~கழஞ்சு காயளவு தின்ன~~ * தின்னவும்.

பிளவைக்கு எண்ணெய் :-

வீரியன் தோல் யீய்த்தின்னி வுவ்வால் சொறித்தவளை நத்தைச் சதை இவை சமன் கூட்டி உலத்திப் பொடி செய்து நல்லெண்ணெயில் பசு மஞ்சள் கூட்டியுத் திடச் சொறித்தவளை புன் வாயில் கட்டவும் வலித்து எரிந்தால் நெய்யாலே தாரை செய்து ஒற்றவும். எதிர் நாவடக்க மந்திரம் விடப்பட்டது.

பல் சிலந்திக்கு நெய் :-

சலந்தியின் குணம் எரிக்கும். வீக்கும். விகற்பிக்கும். கண் தூக்கம் வராது. தண்ணீர் உழலை உண்டு. இதுக்கு நெய் :- சற்றி சாறணைபிராய் விரை நன்னாரி விரை, வெள்ளறுகு, அஞ்சுலை வயிரவன் கிழங்கு, ஆகாச கெருடன் கிழங்கு, விட்டுண கிராந்தி, மணத் தக்காளி இந்த வேர்கள் பசுவின் பால் வார்த்தரைத்து அதிமதுரம் கோட்டம் நறும் பிசின் சிவந்த கடல் நுரை கல் மதம் கல் நார் கோரோசினை சடைச்சிக்காய் இவை கூட்டி அரைத்துக கரைத்து பசுவின் நெய்யில் வடித்து யிடவும். பல் சிலந்தியும் குணமாம்.

இரசக் குளிகை :-

கன்னிக் கோழி முட்டை தமரிட்டு இதில் முக்கழஞ்சு இரசம் விட்டு சீலை வடி கொண்டு விடவும். சிலத்திப் போட்டுக் கொண்டு மூடிக் கோதும்பை மூடி அரைத்து சீலை யிஊட்டி முட்டையை மூன்று சீலை மண் செய்து உலர வைத்து எடுத்து கல்ச் சுண்ணாம்பு சுட்ட கல்லு படி.ச, முக்குறுணி கொள்ளுச் சட்டியிலே போட்டு அதின் மேலே முட்டையை வைத்து அதின் மேலே நாலு படி கல்லிட்டு அதின் மேலே எருமை மூத்திரம் பாக்கு விட்டு ஆவி போகாமல் சீலை மண் செய்து கொள்ளவும் விடி வேறு விநாயகர் பூசை பண்ணி எடுக்கவும்.

பஞ்ச் கெவ்வியம் :-

சீவதை பலம்.ரு, எலியாலம் வேர் பலம்.ரு, திரிபலையம்.யஉ, பாதிரி வேர் கொன்னை வேர், புங்கம் வேர், கொடு வேலி வேர் இவை ஒரொன்று பலம்.உ, பதக்குத் தண்ணீரிலிடித்திட்டு யாக்கி செப்புத் பாத்திரத்தில் விட்டு செவ்வியம் தேவதாரம் மஞ்சள் மர மஞ்சள் குரங்கிட்டம், பிரமிச் சாறு உழக்கு, கள்ளிப் பால் உழக்கு, திரி கடுகு வட்டத் திருப்பி வேர், ரோஉணி, இந்துப்பு, பெருங்காயம், திப்பிலி, மூலம் வெருகங் கிழங்கு ஒரொன்று நாழிகை பலம்.க, பசுவின் பால், தயிர், மோர், கோமியம், சாறுகச் சாறு ஒரொன்று த மருந்து அரைத்துக் கரைத்து வடித்து நக்க எட்டுக் குன்மம் பீலிகை மகோதரம் அட்டவிகை கெற்ப விப்புருதி பதி தூஊ பாண்டு ரோகம் மருத்தீடு காய சுவாதம் இவை தீரும்.

வசந்த குசு மாகரம்.

காரீய்யம் காசிடை.அ, வெள்ளீய்யம் காசிடை.உ, துத்தம் காசிடை.க, தங்க வெள்ளி பணவிடை.உ, தங்கப் பொன் பணவிடை.க, இரண்டு முருக்கித் தகடு தட்டிக் கொள்ளவும். ஒரு புதுச் சட்டியிலே வரிக் கற்றழைச் சாற்றை ~~இரசம்~~ இரண்டு மூன்று சிலவு பிசறி உலர வைத்து துத்த நாகத்தை தகடாக்கி கீழே ஒரு தகடும் மேலே ஒரு தகடும் வைத்து நடுவே வெள்ளியும், வெளளீய்யமும் தகடாக்கி இந்த இரண்டு வகைத் தட்டையும் துத்த நாகத் தகட்டுக்கு நடுவே வைத்து அந்தச் சட்டியிலே வைத்துச் சிறுகீரை வேர் இரண்டு பலம் கற்றாழை வேர் நாலு பலம் கீழும் மேலும் வைத்துச் சீலை மண் செய்து கரு வேலம் விறகு ஆத்தல் ஆவாரம் விறகு ஆளுதல் இட்டு இருபது நாழிகை எரிக்கவும். அடுப்பு வெள்ளாவி அடுப்புப் போலே வைக்கவும். பின்பு சட்டியைத் திறந்து ஒரு இருப்புப் பொட்டுக் கோலாலே மத்திக்கவும். கட்டி பட்டிருந்தாலே வேறே எடுதது

ஒரு சட்டியிலே போட்டு அரப் பொடி பலம்.உ, செம்பரத்தம் பூக் கூடப் போட்டு அரைத்து எடுத்துக் கொண்டு இரதம் பலம்.க, முறித்துக் கொண்டு சாதிலிங்கம் பலம்.க, ஒரு சட்டியிலே முன்பு புடமிட்ட மருந்து போட்டு கற்றாழை வேர் மடல் சிறு கீரை வேர், செருப்படி இவை சற்று சற்றாகப் போட்டு வறுக்கவும். இரசம் அரப் பொடி சாதிலிங்கம் இவை ஒவ்வொன்றாகக் கூடப் போட்டு வருக்கவும். வறுத்த பின்பு ஒரு சட்டியிலே செருப் படி அரைத்துக் கீழு மேலும் வைத்து சீலை மண் செய்து மூன்று புடம் நாழியாக மூன்று நாள் வைத்த பின்பு எடுத்து ஒருக் கால் வறுத்துக் கொண்டு எடுத்து பறணியில் அடைத்து கொண்டு ஆவாரங் கொழுந்து மோரிலே பிட்டிட்டு மோர்க் கடுகுங் கூட்டிக் கொழுந்து அரைக்கவும் போது மோர்க் கடுகு வார்த்தரைத்துக் கொள்ளவும். இது தயிரிலிடவும். கிராம்பு, சாதிக்காய், திப்பிலி, ஆவாரம் விரை பொடி பண்ணி தேனிலிடவும். தேற்றாங் கொட்டை ஒரு பாக்களவ சாந்து எருமை வெண்ணை ஒரு பாக்களவு கூட்டி அரைப் பண விடை செந்தூரமிடவும். மருதம் தாணி பதக்கு நெல்லிடை வெட்டி வந்து இடித்து கலத்த தண்ணீரிலே போட்டு ஒரு நாளுறவைத்து மறு நாள் எடுத்துப் பிழிந்து கொண்டு சாற்றைப பாகு பதமாகக் காய்ச்சி நாலு சட்டி இரண்டு சட்டியிலே மீட்டு சூரியப் பிடமிட்டால் குழம்பாம். அந்தக் குழம்பிலே ஏருங்குங்கிலியம் பலம் பொடி செய்து ~~வச்சிரக்~~ பூபதி காயம் பண்ணி சட்டியில் குழம்பிலே தூவ உணர்த்தி இப் பொடியுடன் கட்டுக் கொடி வச்சிரக் காயம் பண்ணு பொடியாக்கி நாழி மாத்திரம் கூட்டிக் கொண்டு சுவறச சுவறச்சூரிய புடம் உணர்த்தவும். எடுத்துக் கொண்டு தயிர் வடி கொண்டு நாலு காசிடை பொடியும் ஒரு பணவிடை ஒரு பண விடையும் கூட்டி பத்து நாளிடவும்.

தாகத்துக்கு குறுணி மோரிலே தேற்றாங் கொட்டை அரைத்து தெளிய விட்டு சீலை வடி கொண்டு புதுச் சட்டியிலூற்றி ஏலம், இலாமிச்சம் வேர் போட்டுத் தாகமான போது குடிக்கவும்.

<u>தாப குடிநீர்</u>:- கடுக்காய் பலம்.ய, தான்றிக்காய் பலம்.ய, ஆவரை வேர் பட்டை பலம்.ய, கடலிஞ்சி வேர்ப் பட்டை பலம்.ய, இவை யெல்லாம் இடித்து தூளாக்கி அதுக்கு நீர் வார்த்து இதிலே ஒரு படி தூளும் அஞ்சு தேற்றாங் கொட்டையும் சீவிப் போட்டு உரிய நீராகக் காய்ச்சி குடிநீர் அசனத்துக்கு மேலே இராத்திரிக்கு குடிக்கவும்.

தாகத்துக்கு பருத்திக் கொல் லைகளிலே திடல்களிலே கூன எறும்பென்றும் தோன்றி யிருக்கும். அந்த மண்ணை நீரிலே போட்டுப் பத்து நாழிகை ஊறப் போட்டு தாகமாக போது குடிக்கவும்.

## <u>பூபதி பற்பம்.</u>

கெந்தகம் உய. பலம், பாக்கு வெட்டி கொண்டு பருத்திக் கொட்டை மாத்திரம் வெட்டி ஒரு சட்டி நிரம்பப் பசுவின் பால் வார்த்து ஒரு சீலை வேடு கட்டி அதின் பேரிலே கெந்தகம் வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து பால் சுவற எரித்து இப்படி மூன்று சிலவ எரித்து எடுத்து பசுவின் கோமியத்திலே இப்படி மூன்று தரம் வைக்கவும். எடுத்துப் பறணியிலடைத்துக் கால் பணவிடை ஒரு மண்டலங் கொள்ள குன்ம சூலை தீரும்.

<u>இன்னம் ஒரு வகை பூபதி பற்பம்</u>:- <u>இரதம்</u>.ங, பலம் வங்காளப் பச்சை பலம், சுத்தம் பலம், கெந்தகம் ங பலம் கெவரி ஒரு பணவிடை நேர்வாளம் சுத்திப் பண்ணின கொட்டை.ய, வெண்காரம் பலம்.க, அரிதாரம் பலம் இவை எல்லாம் வில்வ இலைச் சாறு வார்த்தரைத்து பிலகாலுக்குள்ளே வைத்து செங்கல்லுரைத்து வாயி லமைத்து சீலை மண் செய்து பெருஞ் சட்டிக் குள்ளி குறுணி நாழி மணலிட்டு அதிலே வைத்து மேலுங் குறுணி நாழி மணலிட்டு சட்டிக் கொண்டு மூடி நாழிகை எரித்து பறணியலடைத்து வைத்து அரைப் பணவிடை வெல்லத்திலிடவும். குன்மம் சூலை நீரழிவு பிர மியம் தீரும்.

<u>வறட் சூலைக்கு</u>:- முப்பது செங்கொட்டை இரதம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, எள்ளு பலம்.கா, அரிதாரம் பலம்.வ, அசமதாகம் பலம்.உ, மஞ்சள், பலம்.உ, நெ ல்லிக் காய்க் கெந்தகம் பலம்.வ, அரிசி கருஞ்சீரகம் பலம்.ங, நல்ல வெல்லம் பலம்

ஒரு சட்டியிலே போட்டு அரப் பொடி பலம்.உ, செம்பரத்தம் பூக் கூடப் போட்டு அரைத்து எடுத்துக் கொண்டு இரதம் பலம்.க, முறித்துக் கொண்டு சாதிலிங்கம் பலம்.க, ஒரு சட்டியிலே முன்பு புடமிட்ட மருந்து போட்டு கற்றாழை வேர் மடல் சிறு கீரை வேர், செருப்படி இவை சற்று சற்றாகப் போட்டு வறுக்கவும். இரசம் அரப் பொடி சாதிலிங்கம் இவை ஒவ்வொன்றாகக் கூடப் போட்டு வருக்கவும். வறுத்த பின்பு ஒரு சட்டியிலே செஞ்சப் படி அரைத்துக் கீழ் மேலும் வைத்து சீலை மண் செய்து மூன்று புடம் நாழியாக மூன்று நாள் வைத்த பின்பு எடுத்து ஒருக் கால் வறுத்துக் கொண்டு எடுத்த பறணியில் அடைத்து கொண்டு ஆவாரங் கொழுந்து மோரிலே பிட்டிட்டு மோர்க் கடுகுங் கூட்டிக் கொழுந்து அரைக்கவும் போது மோர்க் கடுகு வார்த்தரைத்துக் கொள்ளவும். இது தயிரிலிடவும். கிராம்பு, சாதிக்காய், திப்பிலி, ஆவாரம் விரை பொடி பண்ணி தேனிலிடவும். தேற்றாங் கொட்டை ஒரு பாக்களவ சாந்து எருமை வெண்ணை ஒரு பாக்களவு கூட்டி அரைப் பண விடை சென்னரமிடவும். மருதம் தானி பதக்கு நெல்லிடை வெட்டி வந்து இடித்து கலத்த தண்ணீரிலே போட்டு ஒரு நாளூறவைத்து மறு நாள் எடுத்துப் பிழிந்து கொண்டு சாற்றைப பாகு பதமாகக் காய்ச்சி நாலு சட்டி இரண்டு சட்டியிலே மீட்டு சூரியப் புடமிட்டால் குழம்பாம். அந்தக் குழம்பிலே இருங்குங்கிலியம் பலம் பொடி செய்து வச்சிரக் காயம் பண்ணி சட்டியில் குழம்பிலே தூவ உணர்த்தி இப் பொடியுடன் கட்டுக் கொடி வச்சிரக் காயம் பண்ண பொடியாக்கி நாழி மாத்திரம் கூட்டிக் கொண்டு சுவறச சுவறச்சூரிய புடம் உணர்த்தவும். எடுத்துக் கொண்டு தயிர் வடி கொண்டு நாலு காசிடை பொடியும் ஒரு பணவிடை ஒரு பண விடையும் கூட்டி பத்து நாளிடவும்.

தாகத்துக்கு குறுணி மோரிலே தேற்றாங் கொட்டை அரைத்து தெளிய விட்டு சீலை வடி கொண்டு புதுச் சட்டியிலூற்றி ஏலம், இலாமிச்சம் வேர் போட்டுத் தாகமான போது குடிக்கவும்.

தாப_குடிநீர்:- கடுக்காய் பலம்.ய, தான்றிக்காய் பலம்.ய, ஆவரை வேர் பட்டை பலம்.ய, கடலிஞ்சி வேர்ப் பட்டை பலம்.ய, இவை யெல்லாம் இடித்து தூளாக்கி அதுக்கு நீர் வார்த்து இதிலே ஒரு படி தூளும் அஞ்சு தேற்றாங் கொட்டையும் சீவிப் போட்டு உரிய நீராகக் காய்ச்சி குடிநீர் அசனத்துக்கு மேலே இராத்திரிக்கு குடிக்கவும்.

தாகத்துக்கு பருத்திக் கொல்லைகளிலே திடல்களிலே கூன எறும்பென்றும் தோன்றி யிருக்கும். அந்த மண்ணை நீரிலே போட்டுப் பத்து நாழிகை ஊறப் போட்டு தாகமாக போது குடிக்கவும்.

பூபதி_பற்பம்.

கெந்தகம் உய. பலம், பாக்கு வெட்டி கொண்டு பருத்திக் கொட்டை மாத்திரம் வெட்டி ஒரு சட்டி நிரம்பப் பசுவின் பால் வார்த்து ஒரு சீலை வேடு கட்டி அதின் பேரிலே கெந்தகம் வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து பால் சுவற எரித்து இப்படி மூன்று சிலவ எரித்து எடுத்து பசுவின் கோமியத்திலே இப்படி மூன்று தரம் வைக்கவும். எடுத்துப் பறணியிலடைத்துக் கால் பணவிடை ஒரு மண்டலங் கொள்ள குன்ம சூலை தீரும்.

இன்னம்_ஒரு_வகை_பூபதி_பற்பம்:- இரதம்.ங, பலம் வங்காளப் பச்சை பலம், துத்தம் பலம், கெந்தகம் ங பலம் கெவரி ஒரு பணவிடை நேர்வாளம் சுத்திப் பண்ணின கொட்டை.ய, வெண்காரம் பலம்.க, அரிதாரம் பலம் இவை எல்லாம் வில்வ இலைச் சாறு வார்த்தரைத்து பிங்கானுக்குள்ளே வைத்து செங்கல்லுரைத்து வாயி லமைத்து சீலை மண் செய்து பெருஞ் சட்டிக் குள்ளி குறுணி நாழி மணலிட்டு அதிலே வைத்து மேலுங் குறுணி நாழி மணலிட்டு சட்டிக் கொண்டு மூடி நாழிகை எரித்து பறணியலடைத்து வைத்து அரைப் பணவிடை வெல்லத்திலிடவும். வன்மம் சூலை நீரழிவு பிர மியம் தீரும்.

வறட்_சூலைக்கு:- முப்பது செங்கொட்டை இரதம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, எள்ளு பலம்.கா, அரிதாரம் பலம்.வ, அசமதாகம் பலம்.உ, மஞ்சள், பலம்.உ, நெல்லிக் காய்க் கெந்தகம் பலம்.வ, அரி கருஞ்சீரகம் பலம்.ங, நல்ல வெல்லம் பலம்

இவையெல்லாங் கொண்டு வந்து செங்கொட்டையம், என் நம் உரலிலே போட்டு சற்று இடித்து மற்ற மருந் தெல்லாம் நன்றாக ஆற்கப் பொடி செய்து அரைத்து அந்த உரலிலே போட்டு வெல்லமும் போட்டு இடித்து புதுச் சட்டியிலே வேடு கட்டின வைத்து இரண்டு நேரமும் கொள்ளவும். தீரும்.

தம்பனக் குளிகை:- சமுத்திராச் சோகி விரை, முருங்கை விரை ஒரு சிரங்கை, கஞ்சா விரை ஒரு சிரங்கை, அபின் நாலு காசிடை பிறண்டை பழம் ஒரு சிறங்கை, பிராய் பழம், ஒரு சிறங்கை, மருமத்தை விரை ஒரு சிறங்கை எல்லாம் முத்தின தேங்காய் கண் திறந்து இளநீர் ஊற்றிப் போட்டு அதிலே அந்த மருந்து போட்டு உய்ப்பக் கிடாவி செவ்வாய்க கிழமை நாள் பதைத்து எட்டா நாள் எடுத்து இளநீர் வார்த்தரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும். வேண்டினால் ஒரு உருண்டை விழுங்கவும். கைப்பு, புளிப்பு ஆகாது. கை கண்டது.

தம்பனக்கு:- சாதிக்காய், அபின், சாதிபத்திரி, பச்சைக் கற்பூரம், அக்கரா இவை அஞ்சும் மருந்திலே கற்பூரமும் அபினும் தள்ளி நின்ற மூன்று மருந்தும் பொடி செய்து ஒரு கொட்டங் கச்சியிலே யிட்டுப் பசுவின் பால் வார்த்து கள்ளின இரண்டு மருந்தும் ஒக்கப் போட்டு வேப்பந் தடி கொண்டு அரைத்து உருண்டை ஒரு களிப் பாக்களவு உருட்டி நிழலி லுலத்தி வைத்துக் கொள்ளவம். கொள்ள வேண்டினால் ஒரு உருண்டை கொண்டு பசுவின் பாலுஞ் சோறுமாம்.

பித்தத்துக்கு:- எலுமிச்சம் பழச் சாறு உழக்கு, கன்னார் பொடிசெய்து சாற்றிலே குழப்பி தசி கிராப்பிவிட வேறு குடிக்கப் பித்த முறியம். மகா கோடா சூழி

மகா கோடா சூழி:- நாவி பலம்.உ, இருவி பலம்.க, நேர்வாளம் பலம்.க, வெண்காரம் பலம்.க, பாஷாணம் பலம்.க, சவுக்காரம் பலம்.க, பூத கரப்பான் பலம்.க, அரிசி பலம்.க, கெந்தகம் பலம்.க, கெவரி பலம்.க, இரதம் பலம்.க, சுக்கு பலம்.க, உள்ளிப் பூடு ருய கணவன் மிளகு உரி, சீனக் காரம் பலம்.க, [illegible] சத குப்பை பலம்.க, கடுகு ஆழாக்கு, நற்சீரகம், ஆழாக்கு, கருஞ் சீரகம் உரி, வசம்புத் தே...ய, வெண்காரம்.க, பதிப்பிலிபலம்.உ, அத்தித் திப்பலி பலம்.க, செங்கொட்டை ய இவையெல்லாம் கையயாந்த கரைச் சாறு வார்த்தரைக்கவம். இப்படி ஏழு நாளரைக்கவும். தினம் நாழிச் சாறு வார்த்தரைக்கவம். உருண்டை சிறு பயறு அளவு. இது அநுபானங் களிலே விடவும்.

இரத பற்பம்:- இரதம் பலம்.உ, காந்தம் அரப் பொடி பலம் 6, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.க, இவை கற்றுழஞ் சாறு வார்த்தரைத்து செப்ப வட்டியிலிட்டு சூரியன் முகத்தில் வைக்க பற்பமாம். இது தேனில் குழைத்து தின்ன எரி குன்மம் வலி குன்மம், எலி கடி, வண்டு கடி, வென் சூட்ட மாறும்.

பாம்புக்கு:- வேளையும், உள்ளி வசம்பும், நறுக்கி நசியமும் சுவளையமிடவும். தும்பையும் துளசியும் மிளகு, உள்ளி வசம்பு நறுக்கித் சுவலையிடவம். நசியமிடவும். பீச்சுளாத்தியிலே உள்ளி வசம்பு நறுக்கித் வலையடவும். நசியமிடவும். நல்ல பாம்புக்கு நொச்சயிலேம உளளி வசம்பு, உப்பு சிறு நீர் விட்டுத் துவைத்து தலையில் அத்தி மத்திகக. கரந்தையிலே கய்யாந்த கரையிலே நொச்சி யிலே துவைச்சு உள்ளுங் கொடுத்து தலையிலும் மத்திக்கவும். சுககொடு குப்பை மேனி சூழ் பெருங் காயம் கூட்டி செத்தவன் மூக்கில் பிழிய சினத்துடன எழுந்திருப்பான். குப்பை மேனிச் கசக்கித் தலையில் குத்திப் பிழிஞ்சுதவும். விஷ டம் படும். தும்பையும், சாறணை சமூலத்துடனே பிடுங்கித் துவைத்து சிறு நீர் வார்த்து அதிலே பத்து மிளகும் அரைத்துக் கரைத்து அசந்த ஆளுக்கு உள்ளுங் கொடுத்து நசியம் பண்ணவும். அசந்த ஆளும் ⅟ எழுந்தருப்பான். தடவுக் கடி வாயளவு ஆள முரக்கவும்.

கழுதை வண்டு கடிக்கு:- துளசியிலே அரைத்து எருமை மோரில் குடிக்கவும்.

மூலத்துககு: முததெருத் தன்கைக்*சுருங் செவி கோடைக் கிழங்கு மாளக கிழங்கு, பிறண்டைக் கிழங்கு, கொடு வேலி வேர், உள்ள வசம்ப கூட்டி நல்லெண்ணெயில் எரித்து நக்கவும். மூலங் கரையும். திரிகடுகு பொடி செய்து ஆடா தோடைச் சாறு உழககு இதில் அவ தேனும் ஒரு கரண்டி வார்த்துக் குடிக்கவும்.

ஊமச்சி கூடு.

ஊமைச்சி பிடித்து உலத்தித் தூளாக்கி யிடித்து இதக்குக் கூட்டு மருந்து சீனக்காரம், சவுக்காரம், வளையலுப்பு, இந்துப்பு, பெருங்காயம், கள்ளச் சோறு இவை யிடித்துத் தூளாக்கி கருப்புக் கட்டியில் தின்ன வெப்பு பாவை கரையும்.

காமாலைக்கு: கடுக்காய் .ள, நறுக்குக கொட்டை வாங்கப் போட்டு.ய, நீரிலிட்டு .உ, நெய் விட்டு உய. கடுக்காய் அரைத்து கரைத்து கையாந்த கீரை ஊசி மல்லிகை புடோல் சிறுவழுதலை இவை சாறுக் கொண்டு நெய்க்கு இரட்டி கூட்டிக் கோட்டம் விழால் மஞ்சள் மரமஞ்சள் தேவதாரம் திரிகடுகு, கொடுவேலி சிவதை வேர்ப் பட்டை ஒரொன்று நாழி நெய்க்கு பணம்.க, கூட்டி வெள்ளாட்டுப பாலாகுதல் பசுவின் பாலாகுதல் சமன கூட்டி வடித்து நித்தம் பலம்.உ, நெய்யும் கற்கமும் கூட்டி நக்கக காமாலை போம்.

பிரமி நெய்:- சிவதை வேர், மஞ்சள் கடுக்காய், இலவஙகம், கச்சோலம், திபபலி, இந்துபப, வழால் விசம்பு, கண்டு சர்க்கரை, சுக்கு, மிளகு, தேவதாரம், அத்தித் திப்பிலி, வாலுழுவை, கராம்பு, வசுவாசி, சாதிக்காய் இவை ஒரொன்று பலம்.ச, பிரமிச் சாறு நெய் நாழி புகட்டி பதத்தில் வடித்துக் கொள்ளுவது.

இருமலுக்கு:- அவரிச் சாறு, வேலிப் பருத்தி முருக்கி செருப்படி, கம்பந்திராய், வெள்ளருகு, கண்டங் கத்திரி நுணா விலை பேர முட்டியிலை, ஆடா தோடை, கற்பூர வள்ளி தூதுவளை, சமூலம், இன்பூறல் நன்னாரி, சீதேவியார், பொன் முசுட்டை ஒரொன்று உழக்குச் சாறும். செம்பையிலைச் சாறு .உ, எண்ணை புகட்டி புங்கந தோல் நன்னாரி வேர், கோட்டம், திப்பிலி, ஏலம், அத்தித் திப்பிலி, கடுகுரோகணி, கச்சோலம், சுரலும் அரத்தை, மதுரம், நாகப்பூ, தேவதாரம், அதிவிடையம் இவை கய மிளகு கய அரைத்து கரைத்து முலைப் பாலை புகட்டி வெந்து வடித்து நக்க கரை சுவாதம் இருமல் மருத்தீடு இளைந்து*கடுத்து இவை தீரும்.

வெள்ளருகுச சாறு.ச, குன்றி அவரி சங்கங் குப்பி, வேப்பிலை, செருப்படி, இன்பூறல், தூதுவளை, சமூலம், நன்னாரி, சீந்தில் தண்டு, சிறு மட்டி ஒரொன்று சாறு ட முத்தக் காசு, பொன் முசுட்டை, வறச் சுண்டில் ஓரிலைத் தாமரை, சிறு வழுதிலை, சுமூலா வரை, கண்டங் கத்திரி, முசுற்று முட்டை, முத்தெருத்தன், செவ் வேர், கிலு கிலுப்பை வேர், பொன்னுங் காணி வேர், சிறு கீரை வேர், பத கரப்பன், தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, சீதேவியார், செங்கழுநீர், செவ்வல்லிக் கொடி வட்டத் தரிப்ப, திப்பிலி, மிளகு, வசம்பு, சுக்கு, சாத்திர வேதி தேற்றும் விதை, சீரகம், கருஞ் சீரகம், நாறபல், மர்த்திப் முகிழ் அத்தித், திப்பிலி, கச்சோலம், அதிமதுரம். அதிவிடையம். அசமதாகம், கிராம்பு, வசுவாதி, சாதிக்காய், இந்துப்ப, இலவங்கம், ஒரொன்று பலம்.க, கூட்டி பாலில் அரைத்து கரைத்து இரு நாழி நெய்யும் புகட்டி பதத்தில் வடித்து நக்குவது. இதுக்குக் கரை சுவாதம், இருமல் உலாத்தி, உள் வெதுப்ப தீரும்.

இருமல் எண்ணெய்:- கோமூத்திரம், கற்பூர வள்ளி, இளநீர்க், குரும்பை, வெசவிலை, வெள்ளருகு, குன்றியிலை, சீதேவியார், செங்கழுநீர், காஞ்சவிலை, நொச்சியிலை, பொடுதலை, பிரமி, அவரி, சங்கங் குப்பி, கம்பந்திராய், தூதுவளை, வெப்பாற்றி இவை ஒ்ரொனறுச் சோறு கருஞ்சரகம், சந்தனம், சிராம்பு, கச்சோலம், அசம தாகம், அதிமதுரம், கண்டில், வெண்ணை, பச்சிலை, செண்பகப்பூ, கோட்டம், ஏலம், இலவஙகம், பூத கரப்பான், வசம்பு, திப்பலி, செஞ் சந்தனம், வலாமிச்சம், மாதளங் காய், மிளகு, தான்றிக்காய், கடுககாய், தலை சூடு வள்ளி வேர், கொழிஞ்சல் வேர், அரமுறி வேர், கண்டங் கத்திரி வேர், நன்னாரி வேர், அவரி வேர், இவை ஒரொன்று இரு பலம் அரைத்துக கரைத்து எண்ணை நாழி புகட்டிப் பதத்தில் வடித்து நக்க யீளை இருமல், காசம் கறை தீரும்.

பித்த பாண்டு ரோகம்: சுக்கு ஒரு பலம், உள்ளி பலம்க, மிளகு ஆழக்கு, கடுக்காய் நுய, கிட்டப் பொடி ஆழாக்கு, அரப் பொடி அழிஞ்சல் வேர் பொடி, உழக்கு, சங்கம் வேர் பொடி உழக்கு, உலத்தி பொடி செய்து கையாந்த கரைச் சாறும்

செருபபடிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறும் ஒரொன்று உழக்குச் சாறு வார்த்தரைத்து உலர்த்திப் பொடி செய்து மற்றப் பொடியுடன் கூட்டி என்ணெயில் ஊமைத்து ஒரு பாக்களவு மூன்று உண்டை விழுங்கவும். பாண்டு ரோகமும ஊது காமாலையுந் தீரும்.

வறக் காமாலைக்கு நெய்யில் குழைத்து விழுங்கவும். செங்க மாரியும் தீரும். இது விழுங்குவது முன்னுள் ச. எருமை மோரிலே எலுமிச்சம் பழச் சாறு, விட்டு கலிம்புற இரும்புற மட்டும் ஊற வைத்து பிற்றை நாள் முதல் நாளொன்றுக்கு உரிய மோர் குடிக்கவும். எட்டு நாள் ஒன்பதா நாள் முதல் முன் சொன்ன பற்பம் விழுங்க.. பாண்டு ரோகம். ஊது காமாலை, வறக் காமாலை, செங்க மாரி எல்லாந் தீரும். கார்ப்பு, புளிப்பு விடவும். நீர் முள்ளி வேரும் மிளகும் ஆகத் தண்ணீரில்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

பாண்டுவுக்கு:- மிளகு உழக்கு, கடுக்காய் கிட்டப் பொடி உழக்கு இரு ச்சிராய் சுட்ட சாமம்பலாமாக்கு இரசம் பலம்.க, கெந்தகம் பலம்.க, மனோசிலை அரைக்கால் வெண்காரம் திப்பலிப் பொடி ஆழாக்கு இவை பொடியாக்கி ஒரு கலசத்திலிட்டு வெரு கடிப் பிரமாணம் தின்னவும். தின்றும் போகா கருப்புக் கட்டியில் குழைத்து தின்னவும். தி பாண்டு ரோகந் தீரும்.

சூலை குடல் வாதம் செய்யும் குணம்: கண்டலக் குடல் குடிக்கு வகை அடித்தடையில் குத்தும் பொருமும். பின்னிரநது குடைச்சலுண்டா. வலம் சலம் விடாது. மேல் நோக்கி நிற்கும். ஓங்கார முண்டாம். குன வலிக்கும் முதுகு நீளம் குத்தும். கெண்டைக் கால் கடுக்கும். பிறங்க கடுக்கும். கெண்டைக் கை கடுக்கும். இதக்கு வெண்காவுள்ளிச் சாறு.

வண்டத் தயிலம்:- காட்டெருமைப் பால் உரி, மாவிலங்கைச சாறு, வெள்ளெருக்கம் வேர்ச் சாறு, உகாய் வேர்ச் சாறு, அப்பைக் கிழங்குச் சாறு, பன்னி மோன்றிக் கிழங்குச் சாறு, வெருகங் கிழங்குச் சாறு, நொச்சிச் சாறு, முருக்கம் பட்டைச சாறு, கழல்க் கொடிப் பருப்ப, செரு மாங்கழல்ப் பருப்பு, நீர் வெட்டிப் பருப்ப, வேப்பம் விரைப் பருப்பு, புன்னை விரைப் பருப்பு, பங்கம் விரைப் பருப்பு, கடலிறுச்சிப் பருப்ப, கடுக்காய் வேர், புங்கம் வேர், கொடுவேலி வேர், பிறந் தோல், அமுக்கிறு வேர், சிவதை வேர், புறந் தோல் சத்தி சாறணை வேர், கண்டங் கத்திரி வேர், சிறமல்லி, பேர் மல்லி, கொள்ளு, நிலவாரை, பெருங்குரும்பை, சிறு கீரை, வெட்சுா வேளை, நாய் வேளை, திருகு களளிப் பட்டை, பிரமி ஆடா தோடைச் சாறு, வெதுப்படக்கிச்சாறு, கற்பூர வள்ளி, செருப்படிச் சாறு, வழைக் காரம், தண்ணீர் உரி, வேலிப் பருததிச் சாறு, இந்துப்பு, பெருங்காயம், காந்தம், வாலுளுவை, வாய் விளங்கம், சதகுப்பை, அசம தாகம், சவடக் காரம், மாஞ்சில், செவ்வள்ளிக கொடி, சமு தேக்கு, சிற்றரத்தை, கருஞ்சீரகம், திப்பிலி, கச்சோலம், ஆயில் பட்டை, கிராம்பு, வசுவாசி, வெருத்தப் பிசின், இ இலவங்கம், சீரகம், கல் மதம், கல்நார், கற்கடக சிங்கி, வெண்காரம், அபின், வெடியுப்பு, அன்ன பேதி, மாங்கிஷ வேதி, நவற் சிகை, துங்கிட்டம், சீனக் காரம், சீதாள தயிலம் சுக்கு, கடுக்காய், நேர்வாளம், சுற்றி மிளகு, மஞ்சள், கடுகுரோகணி, இவை ஒரொன்று ஒரு பலம் தும்பைச் சாறு, முடக் கொற்றான் சாறு, வெள்ளாட்டுக் கோமியம் வார்த்தரைத்து சிற்றாமணக் கெண்ணெ உ., வெள்ளாட்டு நெய்.உ, தேன், வெள்ளாட்டுப் பால்.உ, கரைத்துப்பத வெழ வடித்து நாளது அஞ்சு காசிடை கொள்ள சூலை உதற் வறுத்தம் தல்லிலழி குடல் வாதம், வலப்புறத்தில் பற்றிய வாய்வு குன்மம், சத்தி குன்மம், வாயுத் திரட்சி, பொருமல், அகுவை, குண்ட வாய்வு, பீலிகை, அட்டலிகை, நீராமை, பெரு வயறு, மூல ரோகம், மகோதரம் ஒடு கரப்பான் வீங்கு கரப்பான் விதா மூல வாயுவாதம், இவை பொறுக்கும் இது கை கண்டது. இதககுச் சூடு அடித்துடை யிலும், கெண்டையிலும், அடிவயிற்றிலும், விலாவுக்கு கிற பக்கத்திலே ஒரு நரம்பு பார்த்து அந்த நரம்பிலே போடவம். பிரன்னி ராந்திலும் பெரு விரலும் நடு முதுகிலும் இலக்கிலைசூ இடுவது.

குன்மத்துக்கு:- மஞ்சள் பலம் தீ, கல்லுப்பு விராகனிடை.வ, மஞ்சள் பொடி செய்து ஒரு சட்டி காய வைத்து அந்தச் சட்டியில் முன் கல்லுப்பு ஒரு கட்டிப் போட்டு வறுக்க அதின் பிறகு மஞ்சள் போட்டு சற்றே கிண்டி இரண்டரைப் படி தண்ணீர் விட்டு அரைக்கால்

படியாகக் காய்ச்சி வலி கிளம்பிற பக்கத்தில் கொடுக்கவும். இப்படி அஞ்சு நாள் கொடுக்கவும். பத்தியம் புளி தவிர்க்கவும்.

இந்திராணி தயிலம் :- வெள்ளுள்ளி பலம்.30, பதக்குத் தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி வடித்து கரண்டு பிழிந்து கொண்டு மேல் மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, பஞ்சலவணம் ஆயில் பட்டை, திப்பிலி மூலம் பெருங்காயம், கருங் கொள்ளுக் கோட்டம், தவசி முருங்கை புங்கம், வேர் கொடு வேலி வேர், ஒரொன்று இரண்டு விராகனிடை இடித்து சூ ளாக்கி இரு நாழி கோமியத்தில் அரைத்து ஆமணக் கெண்ணெ இரு நாழி சதிரக் கள்ளி பாலுழக்கு ஒக்கக் கூட்டி எரித்து காந்தாமல்த் தூ ளாவிக் காய்ச்சி வடித்து நித்தம் ஒரு கானளவு கொள்ள வாய்வுக் கட்டும். நீர்க் கட்டும் கழியும்.

காபூதி தாய்த் தயிலம் :- ஆயில் பட்டை தோலா .க, புங்கம் வேர்ப் பட்டை பலம்.ய, நொச்சி வேர் பலம்.ய, தழுதாழை வேர் பலம்.ய, விழுவ வேர் பலம்.ய, ஆதண்டை வேர் பலம்.ய, விழுவி வேர் பலம்.ய, ஆதண்டை வேர் பலம்.ய, முருஙகைப பலம்.ய, வேளை வேர் பலம்.ய, வெருகங கழங்கு பலம். , நாய் வேளை வேர் பலம்.ய, முடக் கொற்றன் பலம்.ய, சிற்ற மட்டி வேர் பலம்.ய, ஒடுவை வேர் பலம்.ய, பாலொடுவை பலம்.ய, காரோங்கிப் பட்டை பலம்.ய, எருககால் வேர் பலம்.ய, காரோங்கிப் பட்டை பலம்.ய, சத்திச் சாறணைக் கிழஙகு பலம்.ரு, நன்னாரி வேர் பலம்.ரு. அப்பைக கிழங்கு பலம்.ரு இது வெல்லாம் வெட்டிச் சிறுக நறுக்கி ஒரு கொப்பரையில் போட்டு இரு பத்து நாலு வள்ளத் தண்ணீர் விட்டு மூன்று நாள் எரியிட்டு அஉ்ட பாகமாய்க் காஞ்சவாறே கஉூாயம் பலத்த பருந்தாளியிலே வடித்து இதில் நாலு படி நல்லெண்ணெ வார்த்தது கையான்த கரைச் சாறு, பொன்னங் காணிச் சாறு, பாகலிலைச் சாறு, தழுதாளைச் சாறு, விழுவிச் சாறு, முடக் கொற்றன் சாறு, கொட்டைக் கரந்தைச் சாறு, பாகலிலைச் சாறு, தழுதாளைச் சாறு, விழுவிச் சாறு, முடக் கொத்தான் சாறு, நொச்சிச சாறு இது வகை ஒன்பதும் ஒன்றுக்குச் சாறுபடி .க, பசுவின் பால் படி கூட விட்டு இதுக்கு டைச் சரககு சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.கட, மஞ்சள் பலம்.கரு, வாய் விளங்கம் பலம்.ரு, அதிமதுரம் பலம்.க, கோஉ்டம் பலம்.ரு, கிராம்பு பலம்.வ, குங்குமப் பூ விராகனிடை.உ, கோரோசனை விராகனிடை.க, செண்பகப் பூ விராகனிடை.உ, கம்பி பிசின் விராகனிடை..க, கருங்குங்கிலியம் விராகனிடை.உ, சந்தனம் பலம்.க, மகிழம் பூ விராகனிடை.க குசும்பைப் பூ விராகனிடை.உ, அபினி விராகனிடை.ச, புழுகு சட்டம் வீ.க, கஸ்தூரி வீ.ரு, கத்திரி மஞ்சள் வீ.உ, சிறு நாகப்பூ விராகனிடை.உ, கொத்தமல்லிகை விராகனிடை.ரு, கச்சோலம் வராகனிடை.ரு, தற்கோலம் விராகனிடை.உ, சிறு தேக்கு விராகனிடை.உ, அரத்தை விராகனிடை.ரு, கிரந்தி தகரம் விராகனிடை.உ, கருஞ் சீரகம விராகனிடை.உ, கடுகுரோகணி பலம்.க, அமுககிலாங் கிழங்கு விராகனடை.உ, நிலப் பனைக் கிழங்கு வராகனிடை.உ, மலை தாங்கி வேர் விராகனிடை.உ, வெட்டி வேர் விராகனிடை.உ, வலாம் பிச்சை வீ.உ, கடுகு பலம்.ரு, இது வெல்லாம் பசுவின் பால் விட்டு அரைத்து கஉூாயத்துடன் கூட விட்டு நாலு நாள் சிறு கொதியிட்டு அஞ்சா நாள் பதத்தில் வடித்து விநாயகர் பூசை பண்ணி தயிலம் ஆறவிட்டு தானிய புடத்தில் வைத்துக் கொண்டு நாலு முழுக்குக் வேறே ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு முதல் முழுகும் போது அமுத சித்தி யோகத்தில் முழுகவும். இதுகுத் தீரும் வியாதி சிரோவாய்வு, அப்புத வாய்வு, நவபீனிசம் சயித்தியம், வாத சுரோணி, தம் வாதம், கண் வியாதிகள், இது வெல்லாம் குணமாம். தினம் அஞ்சு திப்பிலி தேனிலூறப் போட்டுக் கொள்ளவும்.

முற்றும்.

சு.ச. 2.11.62.

Completed Verification
31/1/63

வாசக்கள் குறிப்பு:

128